வல்லிக்கண்ணன் கடிதங்கள்

செ. திவான்

வல்லிக்கண்ணன் கடிதங்கள்

வரலாற்றாசிரியர்
செ. திவான் எம்.ஏ., எம்.ஃபில்.,

நஜாத் பதிப்பகம்,
106-F/4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை – 627 002
திருநெல்வேலி மாவட்டம்.
✆ 0462 - 2572665

ஆசிரியரின் 85–ஆவது நூல்

முதற் பதிப்பு	:	22.09.2011
கணினி வடிவமைப்பு	:	நான்சி கணினியகம், பாளையங்கோட்டை.
அச்சிட்டோர்	:	சிவசக்தி அச்சகம், சிவகாசி.
முகப்போவியம்	:	பொன்.வள்ளிநாயகம், நெல்லை.
		முருகன், காசி கிராபிக்ஸ், பாளை.
விலை	:	ரூபாய் ஐம்பது

பிரார்த்தனை செய்ய வேண்டுகிறேன்

எனது துணைவியாருடன் பிறந்த மைத்துனர்

திரு S. வேந்தர் @ சாகுல் ஹமீது

வந்தால் மகிழ்ச்சி; பேசினால் சிரிப்பு;

பேசாமலே பாதியிலே விட்டுச் சென்ற தவிப்பு!

அவரது மறுஉலக நல்வாழ்விற்காகப்

பிரார்த்தனை செய்ய வேண்டுகிறேன்.

செ.திவான்

வல்லிக்கண்ணன் குறித்து தி.க.சி.

ஆன்மீகப் பண்புகள்

இளம் எழுத்தாளர்களுக்குத் தன்னலமின்றி எப்போதும் உதவுதல்.

எல்லோருடனும் ஏற்றத் தாழ்வின்றித் தோழமை பூண்டு உதவியும், ஒத்துழைப்பும் வழங்குதல்.

தமிழ் இலக்கியத்தின் சகல துறைகளிலும் புதுமையை விரும்பி, பரிசோதனைகளை மேற்கொள்ளுதல்.

தாம் வகுத்துக்கொண்ட குறிக்கோளிலும் வேலைத் திட்டத்திலும் உறுதியாக இருத்தல்.

உலகு தழுவிய இலக்கியப் பார்வையுடன், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு இடையறாது தொண்டாற்றுதல்.

இவையே வல்லிக்கண்ணனின் ஆதாரமான ஆன்மீகப் பண்புகள்.

இவைவே வல்லிக்கண்ணன் என்னும் மானுடனின் சீரிய தோழனின் தனிச்சிறப்புகள்!

இவையே தமிழ் எழுத்தாளர் அனைவராலும் போற்றி வளர்க்கப் பெற வேண்டிய, தமிழ் இலக்கிய முன்னேற்றத்திற்கு ஆக்கம் தருகின்ற உயர் பண்புகள்.

வாழ்க வல்லிக்கண்ணன்!

வாழ்க அவரது ஆன்மீகப் பண்புகள்!! *

---

* தி.க.சி., வல்லிக்கண்ணன் பாராட்டு விழா மலர், 1978, துறையூர்.

நூலாசிரியர் செ.திவான் பற்றி
திறனாய்வுத் தென்றல் தி.க.சி.

தமிழகத்தின் தலைசிறந்த வரலாற்று ஆசிரியர்களுள் ஒருவரும், தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ்ப் பண்பாடு இவற்றின் மீது ஆழ்ந்த அக்கறை கொண்டவருமான திரு. செ.திவான்.

சீரிய வரலாற்று ஆசிரியராகப் புகழ் பெற்றுள்ள தங்கள் உழைப்பும் படைப்பும், பெரிதும் மகிழத்தக்கன. மக்களின் விடுதலை, வளவாழ்வு, ஒற்றுமை, உயர்வு எனும் உயரிய குறிக்கோள்களுக்காகத் தன்னலமின்றிக் கரத்தாலும், கருத்தாலும் தொண்டாற்றி வரும் தங்கள் படைப்பாற்றல்கள் மேன் மேலும் வளர்க! வெல்க!

வரலாற்று அறிஞர் செ.திவான் அவர்களின் தமிழ்த் தொண்டு வாழ்க; வளர்க; வெல்க!* இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

---

* 25.03.2003, 20.09.2007, 17.10.2008 ஆகிய நாட்களில் நூலாசிரியருக்கு தி.க.சி. எழுதிய கடிதங்களில் இருந்து.

எண்ண அலைகள்

"பிள்ளையார் சுழி

ஹ ஹ

வ.க."

என்று மூன்று வரிகள் மட்டுமே அவர் எழுதும் அஞ்சலட்டையில் எழுதியிருக்கும். இதற்கு என்ன அர்த்தம்? பிள்ளையார் என்பதும் அவரது எத்தனை எத்தனையோ புனைபெயர்களில் ஒன்றுதான்.

திருநெல்வேலி மாவட்டம், இராஜவல்லிபுரம் மு.சுப்பிரமணியபிள்ளை மகமாயி தம்பதியரின் இரண்டாவது பிள்ளையாக திசையன்விளையில் 12.11.1920-இல் பிறந்தவர் கிருஷ்ணசாமி. அவராக வைத்துக் கொண்ட பெயர் வல்லிக்கண்ணன். எழுத்துலகப் பெயர்கள் வ.க., சொனாமுனா. இளவல், நையாண்டி பாரதி, ஆர். ரத்னம், ஞானப்பிரகாசம், அவதாரம், மார்வியஸ், எஸ்.சொக்கலிங்கம், கோரநாதன், மிவாஸ்கி இப்படி எத்தனையோ புனைப் பெயர்கள் வல்லிக்கண்ணனுக்கு.

ஹ ஹ என்ற இரண்டு எழுத்துக்கள் அவரது வருத்தத்தையும் அதனால் ஏற்பட்ட சீற்றத்தையும் பிரதிபலிப்பவை! இப்படி வல்லிக்கண்ணனிடமிருந்து ஒரு கடிதம் வந்தால் பத்திரிகை அலுவலக நிர்வாகி பதைபதைப்பார்.

'அடடே ரொம்ப கால தாமதம் செய்து விட்டோமே' என்று புரிந்து கொண்டவராக வல்லிக்கண்ணனின் எழுத்துக்களுக்குரிய பாக்கியை - சிறு தொகையை உடனடியாக அனுப்பிவிட்டு 'வல்லிக்கண்ணன் சாருக்கு, இரண்டு மாதமாக பணம் அனுப்பாமல் - எப்படியோ கவனப்பிசகாகிவிட்டது -

இன்று அனுப்பி விட்டோம்' என்று எழுதி சமாளிப்பார்கள் என்று தனது மூன்று வரி கடிதம் பற்றி வல்லிக்கண்ணன் ஒரு முறை என்னிடம் சொன்னார்கள்.

அரசுப்பணி

1937 நவம்பரில் ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அரசு வேளாண்மைத்துறை அலுவலகத்தில் கவர்ன்மென்ட் அக்ரிகல்ச்சுரல் டிமான்ஸ்ட்ரேட்டர் ஆபீசில் குமாஸ்தாவாக பணியில் இருந்து 1941-இல் பணியிலிருந்து விலகினார்.

முதல் சிறுகதை

தன் வாழ்நாள் முழுவதும் எழுத்துப் பணிக்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட வல்லிக்கண்ணனின் முதல் சிறுகதை அச்சில் வந்தது. 1939-இல் பிரசண்ட விகடன் இதழில் 'சந்திரகாந்தக்கல்'.

எழுத்துலகப்பணி

1942-இல் எழுத்துலகில் பயணிக்கத் துவங்குதல்.

1943 புதுக்கோட்டை 'திருமகள்' இதழில் பணி; பின்னர் கோவை 'சினிமா உலகம்' மாதமிருமுறை பத்திரிகையில் சேர்தல்; 'இதயஒலி, பிரசண்ட விகடன். ஆனந்த விகடன், கலைமகள், இந்திரா திருமகள், நவசக்தி, கிராம ஊழியன், சிவாஜி ஹனுமான், சரஸ்வதி, சமரன், கலாமோகினி, தமிழ் செய்தி' இப்படி பல்வேறு பத்திரிக்கைகளில் பணிபுரிந்தவர் வல்லிக்கண்ணன்.

கல்யாணி முதலிய கதைகள்

1944-இல் சினிமா நிலையம் வெளியீடாக வெளிவந்தது 'கல்யாணி முதலிய கதைகள்'. கோவை விரைட்டி ஹால்ரோடு எஸ்.பி.கிருஷ்ணன் கிருஷ்ணா அன்கோவினால் ஒரு ரூபாய் நாலாணவிற்கு 80 பக்கங்களைக் கொண்ட கல்யாணி, ரோஜா இதழ், இது சகஜம், சொர்க்க வாசல், அந்தரப் பிழைப்பு, நாகலோகக் காதல், ரதியின் தோல்வி, வைகுண்டக் காதல்,

வாழ்க்கையில், புனர் மரணம், அபலையின் சாபம், இந்த யுகத்திலே ஆகிய கதைகள் வல்லிக்கண்ணனின் முதல் நூலாக வெளி'வந்தது.

பாவேந்தர் பாரதிதாசன்

சென்னை கமலா பிரசுரலாயம், கிராம ஊழியன் ஆசிரியராயிருந்த வல்லிக்கண்ணன் எழுதிய 'உவமைநயம்' என்ற நூலினை 1946-இல் ஒரு ரூபாய் விலையில் வெளியிட்டது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நூல்களில், தம் கண்ணால், கருத்தால் காணும் நயங்களைத் திறமையாக அந்த நூலில் எடுத்துக் காட்டியவர் வல்லிக்கண்ணன்.

அறிஞர் அண்ணா

*1951-இல் தமிழர்களின் தவப்புதல்வர் அறிஞர் அண்ணா குறித்து விமர்சனங்கள் செய்தவர் வல்லிக்கண்ணன். ஆனால் 1981-இல் 'பாரதிக்குப் பின் தமிழ் உரைநடை' என்ற நூலில், எத்தகைய சூழ்நிலையில் எப்படிப்பட்டவர்களுக்காக எழுதுகின்றோம் என்பதை நன்கு உணர்ந்திருந்தார் அண்ணா. எனவே என்னென்ன எழுத வேண்டும் எதை எப்படி எழுத வேண்டும் என்றும் அண்ணா நன்கு அறிந்திருந்தார். அதற்கேற்றபடி அவரது உரைநடையும் அமைந்தது. அண்ணாவின் பேச்சு அவரைப் போலவே நாமும் பேச வேண்டும் என்ற ஆசையை அவருடைய தம்பிகள் பலருக்கு ஏற்படுத்தியது போலவே, அவருடைய எழுத்து அண்ணாவைப் போல நாமும் எழுத வேண்டும் என்ற எழுச்சியைப் பல இளைஞர்களிடையே உண்டாக்கியது.**

காலத்தின் குரல்

1980 டிசம்பரில் 'காலத்தின் குரல்' (வல்லிக்கண்ணனுடன் சிவசுவின் பேட்டி) என்ற நூல் 52 பக்கங்களில் நெல்லையிலிருந்து வெளிவந்தது.

---

* வல்லிக்கண்ணன், பாரதிக்குப் பின் தமிழ் உரைநடை, சிதம்பரம், 1981, பக். 119, 126.

வல்லிக்கண்ணனின் 'போராட்டங்கள்'

1985-இல் நாகப்பட்டினம் இமயப் பதிப்பகத்தார் வல்லிக்கண்ணனின் 'போராட்டங்கள்' என்ற நூலினை 82 பக்கங்களில் வெளியிட்டனர்.

சிறியன சிந்தியாதான் வல்லிக்கண்ணன்

சென்னை சிந்தாதிரிப்பேட்டை ஞானியாரடிகள் தமிழ் மன்றம் கிபி 2000-இல் தொகுப்பாசிரியர் அ.நா.பால கிருஷ்ணனைக் கொண்டு சிறியன சிந்தியாதான் 'வல்லிக்கண்ணன்' என்ற நூலினை 232 பக்கங்களில் வெளியிட்டது.

வாழ்க்கைச் சுவடுகள்

சென்னை பூங்கொடி பதிப்பகம் 'வாழ்க்கைச் சுவடுகள்' என்ற வல்லிக்கண்ணன் வாழ்க்கை வரலாற்றின் ஒரு பகுதி நூலினை ஆகஸ்ட் 2001-இல் 289 பக்கங்களில் வெளியிடப்பட்டது.

வல்லிக்கண்ணன் வாழ்வும் பணியும்

நண்பர் முனைவர் சு.நயினார் சிவகாசியிலிருந்து மார்ச் 2005-இல், 'வல்லிக்கண்ணன் வாழ்வும் பணியும்' என்ற நூலினை 144 பக்கங்களில் வெளியிட்டுள்ளார்.

நிலை பெற்ற நினைவுகள்

வல்லிக்கண்ணனது வாழ்க்கை வரலாற்றின் பகுதிகளை நிலைபெற்ற நினைவுகள் இரண்டாம் பாகம் என்று சென்னை சந்தியா பதிப்பகம் 2007-இல் 156 பக்கங்களில் வெளியிட்டது. இதில் சகோதரர் எழுத்தாளர் கழனியூரனின் நான் கண்ட வல்லிக்கண்ணனும் அடக்கமாகும்.

வல்லிக்கண்ணனது வாழ்க்கை வரலாற்றையும், அவர் முன் எழுதியுள்ள நூல்களையும் பற்றித் தெரிந்து கொள்ள மேற்சொன்ன நூல்களில் விவரங்கள் விரிவாக இருப்பதால் அதனை இங்கு விவரிக்கவில்லை.

அடியேன் பற்றி வல்லிக்கண்ணன்

தனது '**வாழ்க்கைச் சுவடுகள்**' நூலில் வல்லிக்கண்ணன் எழுதுகிறார்.

'பாளையங்கோட்டையைச் சேர்ந்த வரலாற்று ஆய்வாளர் செ.திவான் போற்றுதலுக்குரிய பணிகள் பல செய்து கொண்டிருக்கிறார். மறைந்து போன, மறக்கடிக்கப்பட்ட வரலாற்று உண்மைகளை ஆய்ந்து கண்டு, சான்றாதாரங்களோடு அவற்றைப் பதிப்பிக்கும் பணியில் அர்ப்பணிப்பு உணர்வோடு அவர் ஈடுபட்டிருக்கிறார். வ.உ.சி. நூல்களையும் தேடி எடுத்து சிறு சிறு வெளியீடுகளாக அவற்றைப் பதிப்பித்து வருகிறார் செ.திவான்.'

இவ்வாறு அர்ப்பணிப்புடன் பாடுபடுகிறவர் எவராவது தோன்றி உழைத்தால்தான் உண்மையான திறமைக்கும், நல்ல படைப்புகளுக்கும் உரிய கவனிப்புக் கிடைக்க வழி பிறக்கும் தமிழ்நாட்டில்.*

புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்

வல்லிக்கண்ணன் '**கோவில்களை மூடுங்கள்**', '**அடியுங்கள் சாவுமணி**" என்று ஆவேசமாக எழுதியவர்.

அவரது '**புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்**' நூலுக்கு சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது. அவரது '**சரஸ்வதி காலம்**' சிந்தனைக்குரியது. அவர் எழுதிக் குவித்த சிறுகதைகள், குறுநாவல்கள், நாவல்கள், நாடகங்கள் ஏராளம். ஏராளம். சொல்லிக் கொண்டே செல்லலாம். விரிவஞ்சி நிறுத்துகிறேன்.

வ.உ.சி. ஆய்வுக் கோவை

எளியேனது 'வ.உ.சி.யின் ஆய்வுக் கோவை' நூலினை நெல்லை ம.தி.தா. இந்து மேல்நிலைப் பள்ளியில் வைத்து வெளியிட்டு மகிழ்ந்தவர் வல்லிக்கண்ணன்.

---

* வல்லிக்கண்ணன், வாழ்க்கைச் சுவடுகள், சென்னை, 2001, ப. 271.

தமிழர் தலைவர் வைகோ

தமிழர் தலைவர் வைகோ அவர்களின் நான்கு நூல்கள் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் வெளியிடப்பட்டது.

CAR குட்டி @ சண்முக சிதம்பரம்

ம.தி.மு.க. தேர்தல் பணிச்செயலாளர் கண்ணியத்திற்குரிய CAR குட்டி @ சண்முக சிதம்பரம் ஏற்பாட்டில் அந்த விழாவில் வல்லிக்கண்ணன் உரையாற்றவும், அடியேன் நன்றியுரை ஆற்றியதும் நெஞ்சைவிட்டு என்றென்றும் நீங்காத நினைவுகள் ஆகும். நிகழ்ச்சி முடிந்த பின்பு வல்லிக்கண்ணனை வழியனுப்பி வைத்ததும், நெல்லைக்கு வரும் போதெல்லாம் அவர்களை நேரில் சென்று சந்தித்து அளவளாவதும், ஒரு முறை சென்னையில் அவர்களது இல்லத்திற்கே நேரில் சென்று இலக்கியங்கள் குறித்துப் பேசியதும் வாழ்வில் அழியா ஓவியங்களாக மனதில் பதிந்து விட்ட நிகழ்வுகள் ஆகும்.

45 கடிதங்கள்

08.02.1996 முதல் 27.08.2006 வரை (அவர் மறைவு 9.11.2006) வல்லிக்கண்ணன், அடியேனுக்கு எழுதிய ஒரு கவர், 18 உள்நாட்டுக் கடிதம், 26 அஞ்சல் அட்டை ஆக 45 கடிதங்களை அன்னாரது நினைவாக சிறு நூலாக்கித் தந்துள்ளேன்.

மௌலவி ஷாகுல் ஹமீது ஜலாலீ

நூலினை நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த சிவகாசி சிவசக்தி ஆர்ட்ஸ் கு.குமரேசன், நான்சி கணினியகம் ஆகியோருக்கும், முகப்போவியம் வரைந்து தந்த நெல்லை ஓவியர் பொன்.வள்ளிநாயகம். உடல் நலமின்றி உள்ளஞ் சோர்ந்து வாடிநின்ற மாதங்களில் அடிக்கடி வந்து எனக்கு உற்சாகம் தந்து எளியேனது உடல் நலத்திற்காகப் பிரார்த்தனை செய்த சகோதரர் மௌலவி ஹாபிழ், எம்.ஏ., ஷாகுல் ஹமீது ஜலாலீ அவர்களுக்கும், எனது துணைவியார் டாக்டர் திவானி ஜஹானரா, எனது பிள்ளைகள் தி.நஜாத், தி.சுகைனா ஆகியோர் என்றென்றும் என் நன்றிக்குரியவர்கள்.

நூல் வெளிவர உதவிய கண்ணியத்திற்குரிய CAR குட்டி @ சண்முக சிதம்பரம் எனது நன்றிக்கு உரியவர்கள்.

எளியேன் வாழ்வதற்காக எழுதவில்லை.

எழுதுவதற்காகவே வாழ்கிறேன்.

22.09.2011
பாளையங்கோட்டை

செ. திவான்,
106F/4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை – 627 002
திருநெல்வேலி மாவட்டம்.
✆0462 - 2572665

நூலாசிரியர் செ.திவான் எழுதிய, பதிப்பித்த நூல்கள்

1) விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள் (தொகுதி – 1) சீதக்காதி அறக்கட்டளையின் முதல் பரிசு ரூ.10,000 பெற்ற நூல்)
2) நிகரற்ற பெருவீரன் மருதநாயகம் கான்சாகிப் (“உணர்வு” வார இதழ் நடத்திய போட்டியில் ரூ.5,000 முதல் பரிசு பெற்ற நூல்)
3) ஆரியமாயை அகல . . . (“சங்கொலி” வார இதழ் நடத்திய போட்டியில் ரூ.5,000 முதல் பரிசு பெற்ற நூல்)
4) திருகுர்ஆன் தமிழில் விளக்கம் தந்த அறிஞர்கள்.
5) நபி பெருமானாரின் நாற்பது பொன் மொழிகள்.
6) தக்கலை பீர் முகம்மது (ரஹ்) ஞானப்பாடல்களும், சரிதையும்
7) இந்திய சுதந்திரப் போரில் நெல்லை மாவட்ட முஸ்லிம்கள்
8) வ.உ.சி.யின் அழகும் ஆரோக்கியமும்
9) குடை
10) சிந்தனைக்கு
11) வ.உ.சி.யின் துன்பத்தின் கற்பனை
12) வ.உ.சி.யும் பெரியாரும்

13) வ.உ.சி.யும் தொல்காப்பியரும்
14) வ.உ.சி. பாடல்கள்
15) வ.உ.சி.யின் அரசியல் பெருஞ்சொல்
16) தெற்கில் ஒலித்த தீன்குரல்
17) விடுதலைப் போரில் விஸ்வகர்மாக்கள்
18) பாரதியும் காங்கிரசும்
19) ஸ்டெர்லைட்டை விரட்டுவோம்
20) உண்மையின் சவுக்கடி
21) கூடங்குளம் அணு உலையை மூடு
22) குடைப்புரட்சி
23) ஆரியப் பாதையில் பசுவதை
24) வாகை சூடி வரும் வைகோ
25) கலைஞரை வென்ற வைகோ
26) வைகோவின் பொன்மொழிகள்
27) சேது சமுத்திரத் திட்ட வரலாற்று நாயகன் வைகோ
28) வ.உ.சி. புகழ் பாடிய முன்னோடிகள்
29) வ.உ.சி.யின் நூற்கோவை
30) வ.உ.சி.யும் பரலி சு.நெல்லையப்பரும்
31) ஆன்மீகச் சிந்தனை
32) வேதங்கள் விலக்கிடும் விக்கிரக வழிபாடு
33) செய்குத்தம்பி பாவலரின் ஷம்சுத்தாசீன் கோவை
34) கட்டபொம்மனின் கடைசி நாட்கள்
35) வி.ஓ.சி. கண்ட பாரதி
36) இறை நேசச் செல்வர் சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி)
37) வ.உ.சி.யின் வள்ளியம்மை சரித்திரம்
38) இறைவனின் திருநாமங்கள்
39) இறுதித் திருநபியும் இயற்கையின் அற்புதங்களும்
40) அண்ணாவின் மறுபக்கம்
41) மாற்றார் மதித்திடும் மாநபி (ஸல்)
42) பெரிய புராணத்தில் வாழ்க்கை நெறி
43) விடுதலையின் நிறம் பச்சை

44) வரலாற்றுப் பாதையில் பசுவதை
45) கட்டபொம்மனும் கலெக்டர் ஜாக்சனும்
46) இலக்கியப் புரட்சியாளர் வ.உ.சி.
47) சதாவதானி செய்குத்தம்பி பாவலரின் நபிகள் நாயகமான்மிய மஞ்சரி
48) வ.உ.சி.யின் உயில்
49) ஆலிப்புலவர்
50) தியாக நெருப்பில் வைகோ
51) வ.உ.சியும் திருக்குறளும்
52) அணைய வேண்டிய அயோத் 'தீ'
53) வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்
54) வியத்தகு சாதனையாளர் வைகோ
55) மாநபி (ஸல்) காட்டிய மனித உரிமைகள்
56) வைகோ . . . வெற்றிப் பாதை . . . வீரச்சங்கொலி
57) செந்தமிழ் வளர்த்த சிங்கப்பூர் அ.நா.மொய்தீன்
58) விடுதலைப் போரில் வீரமிகு முஸ்லிம்கள் (தொகுதி – 2)
59) திராவிட இயக்கம் – வரலாற்றுக் குறிப்புகள்
60) வேலூர்ப் புரட்சியில் (1806) வீரமிகு முஸ்லிம்கள் (தொகுதி – 3)
61) இந்திய சுதந்திரப் பெரும்போரில் இஸ்லாமியர்கள் (தொகுதி–4)–1072 பக்கங்கள்.
62) சங்கொலி
63) பம்பரம்
64) சுயமரியாதை சூரர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி
65) இந்து – முஸ்லிம் ஒற்றுமை
66) புரட்சிக் கனலில் பொசுங்கும் துரோகம்
67) மாலிக்காபூர்
68) சிந்தனைச் சிற்பி சி.பி. சிற்றரசு
69) அறிஞர் அண்ணாவின் அமுத மொழிகள்
70) கழகத்தின் காவலன் கே.வி.கே. சாமி
71) இலக்கியப் புரட்சியாளர் வ.உ.சி.யின் சிவஞான போத உரை
72) வ.உ.சி.யின் சுயசரிதை
73) அஞ்சாநெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரிசாமி
74) கே.வி.கே. சாமி கட்டுரைகள்

75) நாடோடி மன்னன்

76) விடுதலை வேள்வியில் விஸ்வநாததாஸ்

77) கச்சத்தீவு யாருக்குச் சொந்தம்?

78) பாரதி செல்லம்மாள் உயில்

79) தேவநேயப் பாவாணரின் கிறித்தவக் கீர்த்தனம்

80) தேவநேயப் பாவாணரின் துவாரகை மன்னன்

81) இந்திய சுதந்திரப் போரில் தமிழக விஸ்வகர்மாக்கள்

82) மகாகவி பாரதியாரின் இஸ்லாத்தின் மஹிமை

83) வாடகை வீட்டில் வாழ்ந்த வரலாற்று நாயகர் காமராஜர்

84) அறிஞர் அண்ணா, கர்மவீரர் காமராசர், தமிழர் தலைவர் வைகோ

85) வல்லிக்கண்ணன் கடிதங்கள்

அச்சில்--

86) பரிசு பெறாத பாரதி பாடல்

87) இந்திய சுதந்திரப் போரில் வைக்கம் அப்துல் காதர்

88) வெற்றிவேலனின் தூதன் வீரபாகு

89) தமிழகத்தில் இஸ்லாம்

90) கடற்போர் தளபதி குஞ்சாலி மரைக்காயர்

91) 1921 மாப்பிள்ளைமார் எழுச்சி

சங்கொலி, தினமணி, நம்நாடு, அறமுரசு, குர்ஆனின் குரல், மறைச்சுடர், உணர்வு, மக்கள் உரிமை, விடியல் வெள்ளி, சிந்தனைச்சரம், ஜமாத்துல் உலமா, ரஹ்மத், இஸ்லாமிய சகோதரத்துவ குரல், சமரசம், தினமலர், முரசொலி, தினகரன், தினத்தந்தி, பொதிகைச்சாரல், தமிழ் முரசு மற்றும் பல இதழ்களில் 1000–க்கும் மேற்பட்ட கட்டுரைகள் . . .

முகவரி

செ.திவான்,

106 F, 4 A, திருவனந்தபுரம் ரோடு,

பாளையங்கோட்டை – 627 002.

தொலைபேசி: 0462 – 2572665

வல்லிக்கண்ணன் கடிதங்கள்

வல்லிக்கண்ணன்,
C/o தி.க.சிவசங்கரன்,

21E, சுடலைமாடன் தெரு,
திருநெல்வேலி.
08.02.1996.

அன்பு நண்ப, வணக்கம். உங்களை சந்திக்கும் வாய்ப்பு கிட்டியது. மகிழ்ச்சி தந்தது. நீங்கள் அன்புடன் வ.உ.சி. நூல்கள் இரண்டை அளித்து என் சந்தோஷத்தை அதிகப்படுத்தினீர்கள். மிக்க நன்றி. வ.உ.சி.யின் நூல்கள் 'அழகும் ஆரோக்கியமும்', 'துன்பத்தின் கற்பனை' - நேர்த்தியான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளன. அச்சும் அமைப்பும் அருமை. வ.உ.சி. எழுத்துக்களை தேடிக் கண்டுபிடித்து, அவற்றை நல்ல முறையில் பதிப்பித்து, மக்கள் மத்தியில் பரப்ப வேண்டும் என்கிற இலட்சிய நோக்கமும் உங்கள் முயற்சியும் போற்றுதலுக்குரியவை. இத்தகைய எழுத்துக்களை பழைய நூல்களையும் பத்திரிகைகளையும் தேடிக் கண்டு சேகரம் செய்வதே மிகச் சிரமமான காரியம் தான். அதில் நீங்கள் ஆர்வத்தோடு ஈடுபட்டிருக்கிறீர்கள். உங்கள் முயற்சி வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

அன்பு.

வ.க.

வல்லிக்கண்ணன்,
13.03.1996.

10, வள்ளலார் பிளாட்ஸ் தெரு,
புதுத்தெரு, லாயிட்ஸ் ரோடு,
சென்னை – 600 005.

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம். நான் மார்ச் 3-ம் தேதி நலமாக சென்னை சேர்ந்தேன். திருநெல்வேலியில் ஒரு மாதம் இனிமையாகப்

போயிற்று. நண்பர்கள் சந்திப்பு, புத்தகங்கள் படித்தது, சில பாராட்டு நிகழ்வுகள் - எல்லாம் உற்சாகமும் மகிழ்ச்சியும் தந்தன. உங்கள் அறிமுகமும், நட்புமுறை சந்திப்பும் இவற்றில் அடங்கும். 'வ.உ.சி.யின் அரசியல் பெருஞ்சொல்' என்ற புத்தகத்தை அன்புடன் அளித்ததற்கு மிக்க நன்றி. படித்தேன். வ.உ.சி.யின் பேருரை இன்றைய அரசியல் நிலைக்குப் பொருத்தமானதாகத்தான் இருக்கிறது. வ.உ.சி. எழுத்துக்களை நீங்கள் பெரிதும் முயன்று தேடிச் சேகரம் செய்து, அழகான முறையில் பதிப்பித்து வழங்குவது பெரும் சாதனை ஆகும். போற்றப்பட வேண்டிய பணி. உங்கள் அர்ப்பணிப்பையும், உழைப்பையும் ஆர்வத்தையும் பாராட்டுகிறேன். வாழ்த்துக்கள்.

அன்பு.

வ.க.

வல்லிக்கண்ணன், **சென்னை,**

13.05.1996.

அன்பு நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம். தேர்தல் அலுவல்களும் பரபரப்பான அலைச்சல்களும் முடிந்து, இயல்பான வாழ்க்கைக்கும் வழக்கமான பணிகளுக்கும் திரும்பியிருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் நலம் தானே? நான் நலமாக இருக்கிறேன். சென்னையின் கடும் வெயில் தான் கஷ்டப்படுத்துகிறது.

நீங்கள் நேரில் வந்து, 'விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள்' என்ற உங்கள் ஆய்வு நூலை அன்புடன் அளித்ததற்கு என் இதயபூர்வ நன்றி உரியது.

நூலைப் படித்து மகிழ்ந்தேன். உங்களது நீண்ட கால உழைப்பையும், ஆழ்ந்த ஆய்வையும், அரிய உண்மைகளையும் தகவல்களையும் தேடிக் கண்டு தொகுப்பதில் நீங்கள் எடுத்திருக்கக்கூடிய சிரமங்களையும் இப்புத்தகத்தின் பக்கங்கள்

புலப்படுத்துகின்றன. அபூர்வமான வரலாற்று உண்மைகள் இந்நூலில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றுக்கு ஆதாரமான சான்றுகளையும் விடாது அடிக்குறிப்புகளாகத் தந்திருக்கிறீர்கள். நீங்கள் எவ்வளவு புத்தகங்களைப் படித்து ஆய்வு செய்திருக்கிறீர்கள் என்று எண்ணி வியக்க நேரிடுகிறது. வாணிபம் செய்ய வந்த வெள்ளையர்கள் இந்தியா முழுவதையும் வளைத்துக் கொண்டதும், விவிலியத்தை வைத்து மக்களை அடிமைப்படுத்தியதும், சூழ்ச்சிகள் தந்திரங்கள் பிரித்தாளும் வஞ்சகங்கள் முதலியவற்றினால் மக்களை ஏமாற்றி செல்வத்தைச் சுரண்டியதும், வெள்ளையர் போக்குகளை சகிக்காத நாட்டு மக்கள் ஆதிமுதலே எதிர்ப்பு காட்டிப் போராடியதும், உரிமைக்காகப் போராடி உயிர் துறந்தவர்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இடம்பெற்றதையும், இந்திய விடுதலைப் போரில் முஸ்லிம்களுக்குள்ள பங்கையும் இந்நூல் நன்கு எடுத்துக் காட்டுகிறது. முடிவுரை உருக்கமாகவும் உள்ளத்தைத் தொடக்கூடியதாகவும் அமைந்துள்ளது.

உங்கள் பணி உயர்வானது. சிறந்தது. பலனை எண்ணாது, உண்மைகளை எடுத்துச் சொல்ல வேண்டும். உயரிய விஷயங்களை நாட்டு மக்கள் கவனத்துக்குக் கொண்டு வர வேண்டும் என்ற நோக்குடன் அயராது உழைத்து, ஆய்வுகளை வெளியிட்டு வரும் உங்கள் உழைப்பு வீண் போகாது. வாழ்த்துக்கள்.

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன்,

சென்னை,

22.06.1996.

அன்பு நண்பர் திவான்,

வணக்கம். உங்கள் கடிதமும், 'வ.உ.சி.யும் பெரியாரும்' என்ற புத்தகமும் 20-ம் தேதி வந்து சேர்ந்தன. மகிழ்ச்சி. நன்றி.

வ.உ.சி. நூல் வரிசையில் மற்றுமொரு புத்தகத்தை தயாரித்து அழகாக வெளியிட்டிருப்பது மிகுந்த சந்தோஷம் தருகிறது. தலைவர் வ.உ.சி. பற்றிய அரிய செய்திகளை - திலகர், காந்தியுடன் இருந்த தொடர்பு, ரௌலட் சட்ட எதிர்ப்பு, அமிர்தசரஸ் பயணம், வ.உ.சி.யும் பெரியாரும் இணைந்து ஆற்றிய பணிகள் போன்றவற்றை தொகுத்துத் தந்திருப்பது பாராட்டுதலுக்கு உரியது. வ.உ.சி. பிராமணனாக இல்லாது போனதால் எதிர்கொள்ள நேரிட்ட சிரமங்களையும் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள்.

இவற்றுக்கான ஆதாரங்களை, அக்காலகட்டத்திய பத்திரிகைகள், பின்னர் வந்த நூல்கள், தற்காலத்திய வெளியீடுகள் முதலியவற்றிலிருந்து தேடிக் கண்டெடுத்து, தொகுத்துத் தந்திருப்பதில் உங்கள் உழைப்பும் தேடல் முயற்சிகளும் புலனாகின்றன. உங்கள் பணி உயர்வானது. பாராட்டுகிறேன்.

நீங்கள் திட்டமிட்டுள்ளபடி வ.உ.சி.யின் வரலாற்றை முழுமையாக எழுதத் துவங்கிவிடுங்கள். காலம் உங்களுக்கு துணை புரியட்டும். வாழ்த்துக்கள். நீங்களும் மனைவியும் மக்களும் நலமாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன். நான் நலம்.

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன், **சென்னை,**

22.12.1997.

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம்.

நீங்கள் அனுப்பிய 'மருதநாயகம் கான்சாகிப்' புத்தகம் கிடைக்கப் பெற்றேன். நன்றி.

நீங்கள் கான்சாகிப் வரலாற்றை ஆய்வு செய்து 'நிகரற்ற பெருவீரன் மருதநாயகம் கான்சாகிப்' என்ற பெயரில் நூல் எழுதி வெளியிட்டிருப்பது மகிழ்ச்சிக்கு உரிய விஷயம்.

புத்தகத்தைப் படித்துவிட்டேன். கான்சாகிப் வரலாற்றை உள்ளபடி எழுதுவதற்காக நீங்கள் எடுத்துக் கொண்ட சிரத்தையும் சிரமமும் நன்கு புலனாகிறது. அரிய ஆவணங்கள் பலவற்றையும் பரிசீலித்திருக்கிறீர்கள். கான்சாகிப் பற்றி பலரும் எழுதிய நூல்களைப் படித்து விவரங்களும் சான்றுகளும் சேகரித்திருக்கிறீர்கள். நேர்மையோடு, நியாய உணர்வோடும், வரலாற்று நூலை எழுதியிருக்கிறீர்கள். உங்கள் பணி வெகுவாகப் பாராட்டப்பட வேண்டியது ஆகும்.

மருதநாயகமா? கான்சாகிபா? என்ற சர்ச்சை அடிபடும் காலத்தில், சரியான சந்தர்ப்பத்தில், நீங்கள் உங்கள் நூலை வெளியிட்டிருப்பதும் பாராட்டுதலுக்கு உரியது தான்.

கான்சாகிபின் பெருவீரமும், விவேகமும், பரந்த மனோபாவமும், சுதந்திரமான போக்கும் இவ்வரலாற்றின் மூலம் நன்கு தெரிய வருகின்றன. சதிகாரர்களும் காட்டிக் கொடுப்பவர்களும் எப்பவும் இருக்கத்தான் செய்வார்கள் என்பதும் புரிகிறது.

கான்சாகிபின் இறுதிக்காலம் வியப்பு ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

புரட்சிக்காரர்களின் முடிவு பற்றிய தகவல்களை நன்கு தொகுத்து அளித்திருக்கிறீர்கள். உங்கள் உழைப்பையும் ஆற்றலையும் நடுநிலையான தன்மையையும் பாராட்டுகிறேன்.

நீங்கள் கடிதத்தில் கேட்டிருக்கிறபடி, இந்நூல் பற்றி 'தினமணி'க்கு எழுதி அனுப்புவேன். அது 'தினமணி'யில் இடம் பெறுமா பெறாதா என்பது அங்கிருப்பவர்களின் அபிப்பிராயத்தைப் பொறுத்து அமைவதாகும். முயன்று பார்ப்பதில் தவறில்லை தான். நலமாக இருக்கிறேன். உங்கள் நலம் அறிந்து மகிழ்கிறேன். புது வருட வாழ்த்துக்கள்.

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன்,　　　　　　　　　　　　　　　　　　சென்னை,
30.04.1998.

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம். இம்மாதம் 10-ம் தேதி, திருநெல்வேலியில் நீங்கள் தி.க.சி. வீட்டுக்கு என்னை தேடி வந்து, உங்கள் புதிய வெளியீடு ஆன 'தெற்கில் ஒலித்த தீன்குரல்' நூலை அன்புடன் அளித்தது என் உள்ளத்தை நெகிழ வைத்த இனிய செயலாகும். உங்கள் அன்பும் நட்பு உணர்வும் பண்பும் உயர்வானவை; போற்றப்பட வேண்டியவை. நன்றி. நான் 10-ம் தேதி மாலை கன்னியாகுமரி எக்ஸ்பிரசில் புறப்பட்டு 11 அன்று சென்னை சேர்ந்தேன். புத்தகத்தைப் படித்துவிட்டு எழுத வேண்டும் என்று எண்ணியதால், உங்களுக்குக் கடிதம் எழுதுவதில் தாமதம் ஏற்பட்டது. 'தெற்கில் ஒலித்த தீன்குரல்' உங்களது ஆய்வுத் திறனையும், வரலாற்று உண்மைகளைக் கண்டறிந்து அவற்றை உரிய முறையில் பதிவு செய்ய வேண்டும் எனும் உங்கள் ஆர்வத் துடிப்பையும், அதற்காக நீங்கள் எடுத்துக் கொள்கிற அக்கறையையும் சிரமங்களையும் நன்கு புலப்படுத்துகிறது. வரலாற்றில் இது வரை இடம்பெறாது போன தென்காசிப் பாண்டிய மன்னன் சரிதமும், சுல்தான் சையிது இபுராஹீம் ஷஹீது வலியின் பங்கும் பற்றி விரிவாகவும் சான்றாதாரங்களுடனும் இந்நூல் எடுத்துக்கூறுகிறது. இவற்றை தெளிவாக விளக்கும் பழம் பாடலைத் தேடிக் கண்டு பதிப்பித்திருப்பது அரிய செயலாகும். நீங்கள் இப்படி அரும்பெரும் விஷயங்களை, வரலாற்று உண்மைகளை நன்கு ஆராய்ந்து, அவற்றை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதற்காக உங்கள் வாழ்வை அர்ப்பணித்து, காலம் பொருள் உழைப்பு திறமை அனைத்தையும் ஈடுபடுத்தி செயல்புரிந்து கொண்டிருப்பது மிகுதியும் பாராட்டுதலுக்குரியது. உங்கள் பணிகள் வெற்றி அடைய காலம் துணைபுரியட்டும். என் வாழ்த்துக்கள்.

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன்,

சென்னை,

06.05.1998.

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம்.

ஏப்ரல் 30-ஆம் தேதி ஒரு கடிதம் எழுதினேன். 'தெற்கில் ஒலித்த தீன்குரல்' நூல் பற்றி கருத்து தெரிவித்திருந்தேன்.

அதன் பிறகு தபாலில் நீங்கள் அனுப்பிய 'விடுதலைப் போரில் விஸ்வகர்மாக்கள்' என்ற சிறு வெளியீடு வந்து சேர்ந்தது. அன்புடன் அனுப்பி உதவியதற்கு நன்றி.

காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் முதன்முதலில் தமிழில் முழக்கம் செய்த மூக்கன் ஆச்சாரி பற்றிய விவரங்களை சேகரித்து பிரசுரம் செய்திருக்கிறீர்கள். மூக்கன் ஆச்சாரியின் பேச்சையும் வெளியிட்டிருக்கிறீர்கள்.

ஆச்சாரியின் சொற்பொழிவு நாட்டின் நிலைகுறித்த கவலையையும், நாட்டுவளம் சீர்பெறுவதற்குச் செய்தாக வேண்டிய திட்டங்கள் பற்றிய யோசனைகளையும் எடுத்துக்கூறியுள்ளது. ஆச்சாரியின் கூரிய சிந்தனையையும், நாட்டு வளர்ச்சி மீது அவருக்குள்ள அக்கறையையும் அது வெளிப்படுத்துகிறது. அவருடைய கருத்துக்கள் தற்கால நிலைமைக்குக் கூட மிகப் பொருத்தமானவை தான்.

விடுதலைப் போராட்ட காலத்திய பல்வேறு இயக்கங்களில் கலந்து கொண்டு சிறைசென்ற விஸ்வகர்மாக்களின் பெயர்ப் பட்டியலை அச்சிட்டிருப்பது பெரிய விஷயமே. இவ்விவரங்களை சேகரிக்க நீங்கள் மிகவும் சிரமப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவு.

உங்கள் ஆய்வு முயற்சிகள் பாராட்டுதலுக்கு உரியவை. வரலாற்று நிகழ்வுகள் பற்றிய உண்மைகளை தேடிக் கண்டுபிடித்து, அவற்றைப் பதிவு செய்து வைக்கும் உங்கள் ஆர்வத்தையும் உழைப்பையும் பாரட்டுகிறேன். வாழ்த்துக்கள்.

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன், **சென்னை,**
03.06.1999.

அன்பு மிக்க நண்பர் திவான், வணக்கம். நலமாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன். நான் நலம். நீங்கள் கூரியரில் அனுப்பி வைத்த நூல் 'வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்' வந்து சேர்ந்தது. 2 நாட்களுக்கு முன், அன்பளிப்புக்கு நன்றி. அணிந்துரைகள் பலவற்றையும் படித்தேன். நூலை இனிமேல் தான் படிக்க வேண்டும். படித்த பின் விரிவாக எழுதுவேன். நீங்கள் உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும் என்ற நோக்குடன், நன்கு ஆய்வு செய்து, வரலாற்று நிகழ்வுகள் பற்றி விரிவாக எழுதிக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் ஆய்வுப் பணிகளும், படிப்பும், உழைப்பும், உற்சாகமான ஈடுபாடும் போற்றுதலுக்கு உரியவை. உங்கள் ஆய்வுகளைத் தொடர்ந்து நல்ல முறையில் நூல்களாக அச்சிட்டு வெளியிடுவதும் வரவேற்புக்குரிய சாதனைதான். தொடர்ந்து உங்கள் வெளியீடுகளை அன்புடன் எனக்கு அனுப்பி வருவது உங்கள் அன்பின் - நட்பு உணர்வின் உயர்தன்மையைப் புலப்படுத்துகிறது.

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன், **சென்னை,**
22.06.1999.

அன்பு மிக்க நண்பர் திவான்,

வணக்கம். உங்கள் கடிதம் 17-ம் தேதி கிடைத்தது. வெளிவந்த எனது புத்தகங்களின் பட்டியல் இத்துடன் அனுப்பியிருக்கிறேன். இப்புத்தகங்கள் பெரும்பாலும் இப்போது கிடைக்க மாட்டா. நீங்கள், **முத்துக்குளிப்பு, கடலில் நடந்தது, குமாரி செல்வா, கல்யாணம் இன்பம் கொடுப்பதா?, ராதை சிரித்தாள், கல்யாணி** முதலிய கதைகள் ஆகியவற்றை

இப்போது பார்த்தேன் என்று எழுதியுள்ளது ஆச்சரியம் தந்தது. ஏதோ 'அதிர்ஷ்ட வசம்' என்றுதான் சொல்ல வேண்டும்.

'புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' புத்தகம் இப்போது கிடைப்பதில்லை. அதுக்கு 'டிமாண்ட்' இருக்கிறது. 1997-லேயே புதிய பதிப்பு கொண்டு வருவதாகச் சொல்லி, புரூஃப் அனுப்பி, நான் திருத்திக் கொடுத்தேன். ஆனால் புத்தகம் வரவில்லை.

நீங்கள் அனுப்பிய 'வ.உ.சி. புகழ் பாடிய முன்னோடிகள்' பிரதிகளுக்காக நன்றி. வ.உ.சி. மீது பல அறிஞர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பைக் கண்டெடுத்து, நீங்கள் புதிய பதிப்பு கொண்டு வந்திருப்பது வெகுவாக பாராட்டப்பட வேண்டிய சாதனைதான். வ.உ.சி. மீது அன்பும் மதிப்பும் கொண்டு நீங்கள் தொடர்ந்து அவரது புகழ் சிறக்கப் பணி ஆற்றிக் கொண்டிருப்பது போற்றுதலுக்கு உரியது. வாழ்த்துக்கள்.

'வரலாற்றின் வெளிச்சத்தில் ஒளரங்கஜேப்' நூலைப் படித்து முடித்தேன். ஒளரங்கஜேப் வரலாற்று உண்மைகளை மறைத்தும் திரித்தும் எழுதப்பட்டுள்ள சரித்திரப் புரட்டுகளையும், அவற்றுக்கான ஆதார பூர்வமான மறுப்புகளையும் ஒன்றுவிடாது ஆராய்ந்து நன்கு பதிவு செய்திருக்கிறீர்கள். ஏகப்பட்ட சான்றாதாரங்களைப் படித்து, குறிப்பெடுத்து, உரிய முறையில் தொகுத்து, உண்மைகளை சுட்டிக்காட்டி, நன்கு நூலை எழுதியிருக்கிறீர்கள்.

சிவாஜி பற்றிய உண்மைகள், மதத்தின் பெயரால் எங்கெங்கும் நடைபெற்றுள்ள கோயில் இடிப்புகள், கோரக் கொலைகள், ஒளரங்கஜேபின் உண்மை இயல்புகள், வாழ்க்கை முறைகள், நேர்மையான செயல்பாடுகள் முதலியன இந்நூலில் விரிவாகவும் தெளிவாகவும் தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான ஆதாரங்களையும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இதன் மூலம் உங்களுடைய கடும் உழைப்பும், உண்மைகளை உலகுக்கு

உணர்த்த வேண்டும் எனும் உளத் துடிப்பும் நன்கு புலனாகின்றன.

மனிதகுலம் காலகாலமாக, மண், மதம், பதவிகளின் ஆசையால் வெறித்தனமாகவும், சூழ்ச்சித்திறம், சுயநலநாட்டம், கொலைகளுக்கு அஞ்சாமையோடும் செயலாற்றி வந்திருக்கிறது - வருகிறது என்பதை மனிதகுல வரலாறு எடுத்துக்காட்டுகிறது. அதை மேலும் உறுதிப்படுத்துகிறது இந்த 'வரலாற்றின் வெளிச்சம்'.

உங்கள் ஆய்வு ஆற்றல், அயரா உழைப்பு, எழுத்துப்பணி முதலியவற்றை போற்றுகிறேன். வாழ்த்துகிறேன்.

நலம். நலம் தானே?

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன், **சென்னை,**

23.09.1999.

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம். 'வ.உ.சி.யும் பரலி சு.நெல்லையப்பரும்' புத்தகம் 2 பிரதிகள் கிடைக்கப் பெற்றேன். நன்றி. பரலி நெல்லையப்பரை மறந்துவிட்டார்கள். இன்றையத் தலைமுறையினருக்கு அவர் யார், அவரது சிறப்புகள் என்ன என்பது எதுவும் தெரியாது. அவரையும் அவரது தியாகத்தையும், பாரதிக்கும் வ.உ.சி.க்கும் அவர் ஆற்றிய உதவிகள் பற்றியும் தமிழ்நாட்டினர் தெரிந்து கொள்ள வகை செய்யும் விதத்தில் நீங்கள் இச் சிறு நூலை வெளியிட்டிருக்கிறீர்கள். உங்கள் பணி போற்றப்பட வேண்டியது ஆகும். வாழ்த்துகள். நான் 25 சனியன்று ஸ்ரீவில்லிபுத்தூர் போகிறேன். பென்னிங்டன் நூலகத்தில் எழுத்தாளர் சிறப்பு நிகழ்ச்சி 26 அன்று 3 - 4 நாட்கள் கழித்து. நான் திருநெல்வேலி வருவேன். நலம். நலம் தானே?

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன், சென்னை,
22.10.1999.

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம். நான் செப்டம்பர் 26-ல் ஸ்ரீவில்லிபுத்தூரில் நிகழ்ந்த பென்னிங்டன் லைபிரரி எழுத்தாளர் சந்திப்புக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிறகு, அக்டோபர் 1-ல் திருநெல்வேலி வந்தேன். அங்கு 12 நாட்கள் தங்கினேன். 12 இரவு நெல்லை எக்ஸ்பிரசில் பயணம் செய்து, 13-ம் தேதி சென்னை சேர்ந்தேன். நலமாக இருக்கிறேன். நீங்கள் அன்புடன் அனுப்பிய 'கட்டபொம்மனின் கடைசி நாட்கள்' புத்தகப் பிரதிகள் கிடைத்தன. படித்து மகிழ்ந்தேன். கடிதம் எழுதுவதில் தான் தாமதம். கட்டபொம்மன் பற்றி எழுதப்பட்டுள்ள நூல்கள், ஆய்வுகள், பாடல்கள் குறித்து விரிவான தகவல்கள் தந்திருக்கிறீர்கள். அவற்றைத் திரட்ட நீங்கள் பெரும் முயற்சி செய்திருப்பீர்கள் என்று புரிகிறது. கட்டபொம்மன் வரலாற்றை, அவரது வீரப் போராட்டங்களையும் மரணத்தையும் உணர்ச்சிகரமாக விவரித்திருக்கிறீர்கள். பாரட்டுகிறேன்.

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன், சென்னை,
18.11.1999.

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம். நலமாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன். நான் நலம். நீங்கள் அனுப்பிய 'வேதங்கள் வெறுத்திடும் விக்கிரக வழிபாடு' என்ற நூலுக்காக நன்றி தெரிவிக்கிறேன். புத்தகம் சில நாட்களுக்கு முன்னரே கிடைத்துவிட்டது. நான் கடிதம் எழுதுவதில் தான் தாமதம். விக்கிரக வழிபாட்டை எதிர்க்கிற, கண்டிக்கிற, போதகர்கள் சான்றோர்கள் இஸ்லாம்

மார்க்கத்திலும், இந்து சமயத்திலும் தோன்றி, துணிந்து குரல் கொடுத்துச் செயலாற்றியிருப்பதை வரலாற்றுச் செய்திகளுடன் விவரித்திருக்கிறீர்கள். உங்கள் இயல்புப்படி எண்ணற்ற நூல்களைப் படித்து, ஆய்வு செய்து, ஆதாரங்களை தொகுத்துத் தந்திருக்கிறீர்கள். பாராட்டுதலுக்குரிய நற்பணி. வாழ்த்துக்கள்.

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன், சென்னை,
08.12.1999.

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம். நீங்கள் அன்புடன் அனுப்பிய 'வ.உ.சி. பாடல்கள்' நூல் வரப்பெற்றது. வழக்கம்போல் தாமதப்படுத்திவிட்டேன் கடிதம் எழுதுவதற்கு. வர வர வேலைகள் அதிகமாகிக் கொண்டே இருக்கின்றன. அதனால் செய்ய வேண்டியவற்றை உடனுக்குடன் செய்ய இயலாத நிலை. உங்களை வெகுவாகப் போற்ற வேண்டும். அமைதியாக, விளம்பர ஆரவாரம் எதுவும் பண்ணாது, பெரிய பெரிய காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறீர்கள். ஆழ்ந்து ஆய்வு செய்து, அரிய விஷயங்களைக் கண்டெடுத்து, அவற்றை வெளிப்படுத்துவதில் ஆர்வமாக இருக்கிறீர்கள். பிரதிபலன் கருதாது நம் கடமை இது, நாம் செய்தாக வேண்டிய பணிகள் இவை என்று தொடர்ந்து உழைத்துக் கொண்டிருக்கிறீர்கள். அப்படியே வ.உ.சி. பாடல்களையும் அச்சிட்டு வழங்கியிருக்கிறீர்கள். வாழ்க உங்கள் உழைப்பு. வளர்க உங்கள் ஆய்வு.

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன், **சென்னை,**
13.06.2000.

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம். 'ஆன்மிகச் சிந்தனை' 2 பிரதிகள் நேற்று கிடைக்கப் பெற்றேன். நன்றி. 'தினமணி'யில் நீங்கள் பயனுள்ள பணி ஆற்றியிருக்கிறீர்கள். பண்பாட்டு உயர்வுக்கு வழிகாட்டக்கூடிய உயரிய ஆன்மிகச் சிந்தனைகளை வாரம்தோறும் வழங்கியது பாராட்டுதலுக்கு உரியது. சான்றோரின் அருளுரைகளையும் அன்புச் செயல்களையும் இனிமையாக, எளிய நடையில், அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். எனது பாராட்டுதல்கள்.

இப்பவும் 'தினமணி'யில், 'ஆசிரியருக்குக் கடிதம்' பகுதியில் அவ்வப்போது உங்கள் கருத்துக்களைக் கூறி வருவதை படித்து மகிழ்கிறேன். வாழ்த்துக்கள்.

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன், **சென்னை,**
22.08.2000.

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம். நலமாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன். நான் நலம். நீங்கள் அன்புடன் அனுப்பிய 'இறை நேசச் செல்வர் சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி)' புத்தகம் 2 பிரதிகள் கிடைக்கப் பெற்றேன். நன்றி. படித்துப் பல விஷயங்கள் தெரிந்து கொண்டேன். இறைநேசச் செல்வரின் வரலாற்றை, சுருக்கமாக, நல்லமுறையில் தந்திருக்கிறீர்கள். உங்கள் சிறப்பு இயல்பின்படி தகவல்களுக்கான ஆதாரங்களை பல்வேறு நூல்களிலிருந்தும் திரட்டித் தொகுத்து அளித்திருக்கிறீர்கள். உங்கள் ஆய்வுத்

திறனும் புலமையும் உழைப்பாற்றலும் போற்றுதலுக்கு உரியவை. வாழ்த்துக்கள்.

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன்,

சென்னை,
04.09.2000.

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம். கூரியர் மூலம் அனுப்பி வைத்த இரண்டு புத்தகங்களும் கிடைக்கப் பெற்றேன். நன்றி. நீங்கள் ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் ஆய்வுகளில் ஈடுபட்டு, தொடர்ந்து அரிய நூல்களைப் பதிப்பித்து வருவது போற்றுதலுக்கு உரிய நற்பணி ஆகும். 'வி.ஓ.சி. கண்ட பாரதி'யைப் படித்து மகிழ்ந்தேன். பலப்பல வருடங்களுக்கு முன்பு வ.உ.சி. சுப்பிரமணியம் வெளியிட்டபோது, அச்சிறு வடிவ நூலைப் படித்து அதன் பெருமை உணர்ந்தது உண்டு. இப்போது நீங்கள் அழகாக, சிறப்பாக, வெளியிட்டிருக்கிறீர்கள். சந்தோஷம். 'ஷம்சுத்தாசீன் கோவையை' இனிமேல் தான் படிக்க வேண்டும். படித்த பின் கடிதம் எழுதுவேன். நீங்கள் உங்கள் வெளியீடுகளை தொடர்ந்து எனக்கு அன்புடன் அளித்துக் கொண்டிருப்பது உள நெகிழ்ச்சி ஏற்படுத்துகிறது. நலமாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன். நான் நலம்.

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன்,

சென்னை,

22.11.2000.

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம். திருநெல்வேலியிலிருந்து நான் 9-ஆம் தேதி சென்னை வந்து சேர்ந்தேன். உங்களுக்குக் கடிதம் எழுத வேண்டும் என்ற நினைப்பு தினசரி இருந்த போதிலும், எழுத முடியாமலே ஆகிவிட்டது. வேலைகள் மிகுதி.

திருநெல்வேலியில் நடைபெற்ற 'வ.உ.சி. நூல் கோவை' வெளியீட்டு நிகழ்ச்சியும், த.மு.எ.ச. ஏற்பாடு செய்த பாராட்டு விழா நிகழ்வும் தினமணி, தினமலர், Hindu முதலிய பத்திரிகைகளில் எடுப்பாக இடம்பெற்றிருந்தது மகிழ்ச்சி மிகத் தந்தது.

15-ஆம் தேதி வாக்கில் நீங்கள் சென்னைக்கு வந்திருந்ததாக அறிந்தேன். வை.கோ. மகள் திருமணத்துக்கு வந்திருந்ததாக 'கண்ணியம்' ஆசிரியர் குலோத்துங்கன் தெரிவித்தார். நீங்கள் திருநெல்வேலிக்கு என்று திரும்புவீர்கள் என்பது தெரியாததனாலும், கடிதம் எழுதுவதில் தாமதம் ஏற்பட்டது.

பிறகு நீங்கள் அனுப்பிய 'வ.உ.சி.யின் வள்ளியம்மை சரித்திரம்' வந்து சேர்ந்தது. நன்றி.

வ.உ.சி. நூல்களை ஒரு அர்ப்பணிப்புடன் தேடிக் கண்டுபிடித்து, நல்ல முறையில் புத்தகங்களாக அச்சிட்டு வெளியிட்டு வருவது வெகுவாக பாராட்டப்பட வேண்டிய நற்பணி ஆகும். லாப நோக்கின்றி இப்பணியை நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள்.

வ.உ.சி.யின் இலக்கியப் பணிகள் நன்கு தெரிய வருவதற்கு நீங்கள் எடுத்துக் கொள்கிற முயற்சிகள் நல்ல வரவேற்பைப் பெற வேண்டும்.

நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் நலமாக இருப்பீர்கள் என்று எண்ணுகிறேன்.

நான் நலம். அண்ணியும் பிள்ளைகளும் சுகம்.

சென்ற சில தினங்களில் திருநெல்வேலிப் பக்கம் நல்ல மழை என்று பத்திரிகைச் செய்திகள் மூலம் அறிந்தேன். சென்னையில் சுமாரான மழை பெய்தது.

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன், **சென்னை,**

16.01.2001.

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம். அழைப்பு கிடைத்தது. நன்றி. சாகித்ய அகாடமி விருது பெற்ற தி.க.சி.க்கு பாராட்டு வழங்குவதும், உங்கள் புதிய நூல் 'ஆரியப் பாதையில் பசுவதை' வெளியிடப் பெறுவதும் மகிழ்ச்சியான விஷயங்கள். விழா சிறப்பாக நிகழ வாழ்த்துகிறேன். தலைமை தாங்கும் திரு.சண்முக சிதம்பரம் (குட்டி) அவர்களுக்கு என் அன்பு வணக்கம்.

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன், **சென்னை,**

14.02.2001.

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம். நலமாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன். நான் நலம்.

நீங்கள் அன்புடன் அனுப்புகிற புத்தகங்கள் அவ்வப்போது கிடைக்கின்றன. நன்றி.

'ஆரியப் பாதையில் பசுவதை' வந்து சேர்ந்தது. பிறகு 'வ.உ.சி.யும் தொல்காப்பியமும்' பிரதிகள் கிடைத்தன.

பசுவதை பற்றிய ஆய்வு நூலை முழுமையாகப் படித்தேன். பசு மற்றும் மிருகங்களைக் கொல்வதும் உணவாக உட்கொள்வதும் மனிதகுலத் தொடக்கத்திலிருந்தே நடைமுறையில் இருப்பது தான். யாகம், தெய்வ பூஜை, கொடை என்று பல பெயர்களிலும் மிருகங்கள் கொல்லப்பட்டன. படுகின்றன. உணவாக புசிக்கப்பட்டன; படுகின்றன. வறட்டுப் பசுக்களை - மலட்டுப் பசுக்களை கொல்லக் கூடாது என்ற குரலும் இந்தியாவில் அவ்வப்போது மதத்தின் பேரால் எழத்தான் செய்கிறது. இவற்றை எல்லாம் விவரிக்கும் ஆதாரங்களை, மிகப் பரவலாக சேகரித்து, தொகுத்துத் தந்திருப்பது பெரிய வேலைதான். அதை திறமையாகச் செய்திருக்கிறீர்கள். பாராட்டுகிறேன். பத்திரிகைகள் புத்தக மதிப்புரையை அலட்சியப்படுத்துகின்றன. மதிப்புரைக்காக பக்கம் ஒதுக்குவது வீண் என்றே கருதுகின்றனர் பத்திரிகை ஆசிரியர்களும் முதலாளிகளும். மேலும் ‘ஆரியப்பாதை’, ‘பசுவதை’ என்ற சொற்களே பலருக்குப் பிடிக்காத விஷயங்களாக இருக்கும். எனவே, இந்நூலுக்கு பத்திரிகையில் மதிப்புரை எதிர்பார்ப்பது ஏமாற்றமே தரும்.

தலைவர் வ.உ.சி.யின் சிறப்புகளையும் பணிகளையும் சாதனைகளையும் தமிழ் உலகுக்கு அறியப்படுத்தும் பணியில் நீங்கள் ஒரு அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு, தீவிரமாக உழைத்துக் கொண்டிருப்பது போற்றுதலுக்கு உரியது. தொல்காப்பிய உரை வெளியிடுவதில் வ.உ.சி. எடுத்துக் கொண்ட முயற்சிகளையும் எதிரேற்ற சிரமங்களையும் உரிய முறையில் விவரித்திருக்கிறீர்கள். ‘வ.உ.சி.யும் தொல்காப்பியமும்’ என்ற சிறு புத்தகத்தில். பாராட்டுக்கள். வாழ்த்துகள்.

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன், சென்னை,
23.05.2001.

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம். உங்கள் கடிதமும் 'இறுதித் திருநபியும் இயற்கையின் அற்புதங்களும்' என்ற புத்தகமும் நேற்று வந்தன. நன்றி. உங்கள் உடல்நிலை சீராக இல்லை என்று அறிய வருத்தம். விரைவில் குணம் அடைய விழைகிறேன். புத்தகத்தைப் படித்து மகிழ்ந்தேன். நபிகள்நாயகம் வரலாற்றில் நிகழ்ந்த அற்புதங்களை நன்கு தொகுத்துத் தந்திருக்கிறீர்கள். வரலாற்றுக் குறிப்புகளை உரிய ஆதாரங்களுடன் பதிவு செய்திருக்கிறீர்கள். உங்கள் 'உழைப்பும் ஆற்றலும் போற்றுதலுக்கு உரியவை. 'சிறியன சிந்தியாதான்' புத்தகத்தை வெளியிட்டவர். அ.ந.பாலகிருஷ்ணன், 7, நாகமணி தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002. விலை ரூ.80. அன்பளிப்பாக அனுப்ப இயலவில்லை. வருத்தம்.

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன், சென்னை,
16.06.2001.

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம். நீங்கள் அன்புடன் அனுப்பிய 'மாற்றார் மதித்திடும் மாநபி' நூலின் 2 பிரதிகள் கிடைக்கப் பெற்றேன். நபி அவர்களைப் பற்றி தமிழன்பர்கள் பலர் எழுதியுள்ள கருத்துகளைத் திரட்டி, தொகுப்பு நூலாக வெளியிட்டிருக்கும் உங்கள் பணி உயர்ந்தது. ஸி.ஸ்ரீநிவாஸஅய்யங்கார், எம்.எஸ்.பூரணலிங்கம்பிள்ளை இருவரும் எழுதிய மகமது நபி வரலாற்றைத் தேடி எடுத்துப் பிரசுரம் செய்திருப்பது விசேஷமாகப் பாராட்டப்பட வேண்டியது ஆகும். உங்கள் ஓயாத உழைப்பும், அயராத ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டு அரிய

விஷயங்களைத் தேடிக் கண்டு அவற்றை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதும் அரும்பெரும் சாதனைகள் ஆகும். வாழ்த்துக்கள். 'சிறியன சிந்தியாதான் வல்லிக்கண்ணன்' என்ற புத்தகத்தை அடுத்த வாரம் உங்களுக்கு அனுப்ப இயலும் என்று எண்ணுகிறேன்.

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன், **சென்னை,**

03.07.2001.

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம். நீங்கள் அன்புடன் அனுப்பிய 'அண்ணாவின் மறுபக்கம்', 'பெரிய புராணத்தில் வாழ்க்கை நெறி' ஆகிய இரண்டு புத்தகங்களும் கிடைக்கப் பெற்றேன். நன்றி. மகிழ்ச்சி.

ஆராய்ச்சியில் நீங்கள் கொண்டுள்ள ஊக்கமும் உற்சாகமும், படிப்பதிலும் ஆய்வுகள் செய்து நூல்கள் எழுதுவதிலும் நீங்கள் செலுத்துகிற ஈடுபாடும் உழைப்பும், ஆய்வுகளை உடனுக்குடன் புத்தகங்களாக வெளியிடுகிற வேகமும் வியக்க வைக்கின்றன. போற்றுதலுக்கு உரியவை அவை. 1) 'அண்ணாவின் மறுபக்கம்' அண்ணா பற்றிய அரிய தகவல்களை தொகுத்துத் தருகின்றன. அண்ணாவின் பேராற்றலை நன்கு எடுத்துச் சொல்கிறது இச்சிறு நூல். 'வரலாற்று நாயகன் வைகோ' பற்றிய குறிப்பில், கவனக் குறைவால் ஒரு பிழை புகுந்துள்ளது. 'அண்ணாவிடம் வைகோ அறிமுகம் ஆனபோது, 'தம்பி, என் பேச்சில் சாரம் இருந்தது' என்று அறிஞர் அண்ணாவின் பாராட்டு பெற்றவர்' என்று காணப்படுகிறது. '**தம்பி உன் பேச்சில் சாரம் இருந்தது**' என்று அச்சாகியிருக்க வேண்டும் அது.

2) 'பெரிய புராணத்தில் வாழ்க்கை நெறி' ஆழ்ந்த ஆய்வு. பெரிய புராணம் குறித்த புத்தகங்கள் பலவற்றை சிரத்தையுடன்

படித்துப் பயன்படுத்தி ஆய்வு செய்திருக்கிறீர்கள். இந்தப் புத்தகத்திலும் கவனக் குறைவால் ஒரு பிழை ஏற்பட்டுள்ளது. ‘அறுபத்து மூவர் ஊர் - மரபு - தொண்டு - காலம்’ பகுதியில் புகழச் சோழர் இரண்டு தடவைகள் இடம்பெற்றிருக்கிறார். 51, 52 (பக்கம் 19) ஆகவே 63-வது நாயனாராகிய மற்றொருவருக்கு இடம் கிடைக்காது போய்விட்டது! **பிற மதம் எனக் கருதாது, அன்பு நோக்குடன், சைவ மத நூலான பெரிய புராணத்தை ஆய்வு செய்து அதன் சிறப்புக்களை எடுத்துச் சொல்லியிருப்பது உங்களின் பரந்த நோக்கையும் விரிந்த உளப் பண்பையும் புலப்படுத்துகிறது. வாழ்க உங்கள் பேருள்ளம். வளர்க உங்கள் ஆய்வு ஆற்றல்.**

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன், **சென்னை,**

27.08.2001.

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம். ‘விடுதலையின் நிறம் பச்சை’ என்ற நூல் முதலில் கிடைத்தது. இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்டு, தியாகங்கள் புரிந்து, சாதனைகள் நிறைவேற்றி, உயிரையும் அர்ப்பணித்த முஸ்லிம்கள் பற்றிய வரலாற்றை ஆய்வு முறையில் நன்கு பதிவு செய்திருக்கிறீர்கள். பாராட்டுகளும் வாழ்த்துகளும். அடுத்து ‘நபிகள் நாயகமான்மிய மஞ்சரி’ நூல் வந்து சேர்ந்தது. செய்குத்தம்பிப் பாவலர் இனிய எளிய தமிழில் அழகாக இயற்றியுள்ள மஞ்சரியை நீங்கள் பிழையறப் பதிப்பித்து இலவச வெளியீடாக வழங்குவது உங்கள் பேருள்ளத்தின் பெருமையைப் புலப்படுத்துகிறது. முன்பு, பாவலரின் ‘கோவை’ (ஷம்சுதீன் கோவை நூலை வெளியிட்டீர்கள்). உங்கள் ஆர்வமும் ஆற்றலும் அயராத உழைப்பும் போற்றுதலுக்கு உரியவை. எனது வணக்கங்கள்.

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன், சென்னை,
24.09.2001.

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம். நலமாக இருப்பீர்கள் என நம்புகிறேன். நான் நலம். ஆகஸ்ட் 28-ஆம் தேதி பதிவுத் தபாலில், ‘சிறியன சிந்தியாதான் வல்லிக்கண்ணன்’ என்ற நூல் உங்களுக்கு அனுப்பினேன். அது கிடைத்ததும் தகவல் தெரிவிப்பீர்கள் என்று எதிர்பார்த்தேன். உங்களிடமிருந்து இன்று வரை கடிதம் எதுவும் வரவில்லை. அந்தப் புத்தகம் பதிவுத் தபாலில் அனுப்பப்பட்டதால் தவறாது கிடைத்திருக்கும் என்று எண்ணுகிறேன்.

‘தினமணி’ ஆசிரியருக்குக் கடிதம் பகுதியில் உங்கள் கடிதம் படித்து மகிழ்ந்தேன். சென்னையில் தண்ணீர் கஷ்டம் பெரும் பிரச்சினையாகத்தான் இருக்கிறது.

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன், சென்னை,
28.12.2001.

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம். உங்கள் 14.12.2001 கடிதமும், ‘வ.உ.சி.யும் திருக்குறளும்’ நூலின் பிரதிகளும் 15-ஆம் தேதி கிடைத்தன. மிக்க நன்றி. அதுக்கு முன்னர் ‘கட்டபொம்மனும் கலெக்டர் ஜாக்சனும்’ நூல் 2 பிரதிகள் வந்து சேர்ந்தன. நீண்ட காலமாக நான் உங்களுக்குக் கடிதம் எழுதவில்லை. வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். அக்டோபர் மாதம் முதல் 2 மாதங்களுக்கும் மேலாகவே படிக்கவும் எழுதவும் முடியாத நிலைமை எனக்கு. முதலில் இடது கண்ணிலும், அடுத்து வலது கண்ணிலும், ‘கேட்டராக்ட்’டுக்காக அறுவை சிகிச்சை செய்ய நேரிட்டது.

அறுவைக்குப் பிறகு தொடர்ந்து கண்ணுக்குச் செய்ய வேண்டிய சிகிச்சைகள். அதனால் கட்டாய ஓய்வு. இம்மாதம் 12-ஆம் தேதி கண்ணாடி வாங்கியாயிற்று. படிக்கவும் எழுதவும் வசதியாக தொடர்ச்சியாக சில நண்பர்களின் தொகுப்புகளுக்கு 'அணிந்துரை' எழுத வேண்டிய வேலை வந்து சேர்ந்தது. இதனால் கடிதம் எழுதுவது தாமதப்பட்டுவிட்டது. நலமாக இருக்கிறேன்.

நீங்கள் உங்களது உடல்நலக் குறைவு, மருத்துவ சிகிச்சை இவற்றினூடும் ஆய்வுப் பணிகளை ஊக்கத்தோடு செய்து வருவதும், புத்தகங்கள் வெளியிட்டுக் கொண்டிருப்பதும் போற்றுதலுக்கு உரியது.

வ.உ.சி.யின் தமிழ்ப் பணிகள் குறித்தும், உங்களுடைய சிறப்பான சேவைகள் பற்றியும் நான் எனது சுயசரிதையான 'வாழ்க்கைச் சுவடுகள்' நூலில் எழுதியிருக்கிறேன். உங்களுக்கு ஒரு புத்தகம் அனுப்ப வேண்டும். கூரியர் நிறுவனம் நான் இருக்கும் இடத்தில் பக்கத்தில் இல்லை. தேடிப் போக வேண்டும். இன்னும் சில தினங்களில் அனுப்பி வைப்பேன்.

புது வருட வாழ்த்துக்கள்.

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன், **சென்னை,**
18.03.2002.

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம். உங்கள் 08.03.2002 கடிதம் 'ஆலிப்புலவர்' 2 பிரதிகள் அனுப்பியதற்காக நன்றி.

நெல்லை மாவட்ட முஸ்லிம் புலவர்கள் பற்றிய தகவல்களையும், ஆலிப்புலவரின் வரலாறு, அவர் இயற்றிய காவியம், அவர் வாழ்வில் நிகழ்ந்த அற்புதங்கள்

முதலியவற்றையும் நன்கு பதிவு செய்திருக்கிறீர்கள். காவியம் பாடிய காலம், அதை அரங்கேற்ற புலவர் எதிர்கொண்ட சிரமங்கள் பற்றி எல்லாம் விவரமாகத் தெரிந்து கொள்ள இந்நூல் உதவுகிறது. உங்கள் ஆராய்ச்சிப் பணி போற்றுதலுக்கு உரியது. வாழ்த்துக்கள்.

எனது 'வாழ்க்கைச் சுவடுகள்' நூலை உங்களுக்கு அனுப்புவதாக நான் கூறியும் மாதங்கள் ஓடிவிட்டன. பார்சல்; பண்ணி, கூரியர் அலுவலகம் தேடிப் போய் அனுப்ப வேண்டும். இரண்டு மைல் தூரத்துக்கு அப்பால் தான் இருக்கிறது அலுவலகம். நான் தான் போக வேண்டும். வேலைகள் அதிகம் இருந்து கொண்டிருப்பதால், இந்த முக்கிய வேலையை செய்வதில் தாமதம் ஆகிறது. இந்த வாரம் அனுப்பி வைக்க முயல்வேன்.

நலமாக இருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். நான் நலம். இப்பவே கோடைகாலம் மாதிரி வெயில் கடுமையாக இருக்கிறது.

உங்கள் நூல்களை எனக்குத் தொடர்ந்து அனுப்பி உதவுவதற்காக மீண்டும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

புத்தகத்தை ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பலாம் என்றால், நூறு ரூபாய் விலை உள்ள புத்தகத்துக்கு 50 ரூபாய்க்கு மேல் வருகிறது தபால் கட்டணம். அதனால் தபாலில் அனுப்பவில்லை.

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன்
C/o கி. ஸ்ரீதரன்,
55, அம்மன் சன்னதி தெரு,
திருநெல்வேலி–6,
06.05.2002.

அன்பு நண்பர் திவான், வணக்கம்.

நான் 2 வியாழன் அன்று திருநெல்வேலி வந்தேன். என்னுடன் என் அண்ணன் மகள் இரண்டு பேர் வந்திருக்கிறார்கள். அவர்களோடு 3 வெள்ளி அன்று கன்னியாகுமரி போனேன். 4இல் அவர்கள் தூத்துக்குடி போனார்கள். நான் நண்பர் ஸ்ரீதர் வீட்டில் இருக்கிறேன். இன்று தூத்துக்குடி போக வேண்டும். பிறகு பாப்பாங்குளம், இப்படி உறவினர்கள் வீட்டுக்குப் போக வேண்டியிருக்கிறது. உங்களுக்காக எனது 'வாழ்க்கைச் சுவடுகள்' புத்தகம் கொண்டு வந்திருக்கிறேன். 12 ஞாயிறு அன்று, வசதிப்பட்டால், ஸ்ரீதர் வீட்டுக்கு வருக, இல்லையெனில் புத்தகத்தை தி.க.சி.யிடம் கொடுத்துப் போவேன். பிறகு நீங்கள் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். நாங்கள் 14 ஆம் தேதி நெல்லை எக்ஸ்பிரசில் சென்னை செல்வோம்.

நலமாக இருக்கிறேன், நீங்களும் நலம் தானே,

அன்பு.

வ.க.

வல்லிக்கண்ணன்,
சென்னை
20.3.2002

அன்புமிக்க நண்பர் திவான் அவர்களுக்கு, வணக்கம்,

உங்கள் புதிய வெளியீடு, 'அணைய வேண்டிய அயோத்தீ' 3 பிரதிகள் கிடைத்தன. அனுப்பியதற்காக நன்றி, படித்தேன். அயோத்தி பிரச்சினை பற்றிய விவரங்களை ஆரம்பம் முதல் இன்று வரை உள்ளனவற்றை விரிவாக எழுதியிருக்கிறீர்கள். ராமன் என்கிற கற்பனைப் பாத்திரத்தையும், கற்பனையான

பிறந்த இடம் முதலியவற்றையும், உணர்ச்சியோடு பெரிதுபடுத்தி, மதவெறியை வளர்த்து வந்திருக்கிற குண்டர்களின் போக்கு இன்று உச்சகட்டத்தை எய்தியுள்ளது. இல்லாத விஷயங்களின் பேரால் காலம் தோறும் எண்ணற்ற அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் தொடர் கதையாக வளர்கிறது அது சுயநலமிகள், மதவாதிகள், அரசியல் வாதிகள், ஆட்சியாளர்கள், நாட்டின் அமைதியைக் கெடுத்து மக்களின் வாழ்க்கையை பாழ்படுத்துகிறார்கள். எனது 18 ஆம் தேதிக் கடிதம் கிடைத்திருக்கும் வாழ்க்கைச் சுவடுகள்' நூல் அனுப்புவதில் உள்ள சிரமங்களை அதில் தெரிவித்திருக்கிறேன் அனுப்பி வைப்பேன்.

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன் **சென்னை**

21.5.2002

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம், 14 ஆம் தேதி இரவு திருநெல்வேலியில் இருந்து நெல்லை எக்ஸ்பிரசில் பயணம் செய்து 15 காலையில் நலமாக சென்னை வந்து சேர்ந்தேன். நலமாக இருக்கிறேன். நீங்கள் சிரமம் எடுத்து வந்து என்னைக் கண்டு பேசியதும், அன்பளிப்புகள் தந்ததும் உள்ள நெகிழ்ச்சி ஏற்படுத்தின. மிக அலுவல்கள், அதி உழைப்பு, அலைச்சல்கள் காரணமாக உங்கள் உடல் நலம் பாதிக்கப்பட்டிருப்பது வருத்தம் தருகிறது. உரிய சிகிச்சைகளினாலும், அமைதி நிலை போதிய ஓய்வு போன்றவற்றாலும் உடல் ஆரோக்கியம் மீள வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். நான் நலம்.

சேது சமுத்திரம் கால்வாய் திட்டம் செயல்படுவதற்கு தலைவர் வைகோ அவர்கள் அக்கறையோடு மேற்கொண்ட முயற்சிகள் போற்றுதலுக்கு உரியவை. *அவற்றை விவரமாகக்*

கூறும் உங்கள் நூலில் சூயஸ் கால்வாய் திட்டம் பற்றி விரிவான விளக்கங்கள் தந்திருப்பது பாராட்டுதலுக்கு உரியது.

அன்பு.

வ.க.

வல்லிக்கண்ணன் **சென்னை**

01.06.2002

அன்புமிக்க நண்பர் திவான் அவர்களுக்கு, வணக்கம், உங்கள் அன்பான கடிதமும் 'ஹிண்டு' நறுக்கும் கிடைக்கப் பெற்றேன். மகிழ்ச்சி. என் பேட்டியை அனுப்பி உதவியதற்கு நன்றி, வாழ்க்கைச் சுவடுகள் படித்த நண்பர்கள் என் வாழ்க்கை அனுபவங்கள் இன்னும் விரிவாக எழுதப்பட வேண்டும் எழுதப்பட்டிருக்க வேண்டும், என்று கருத்து தெரிவிக்கிறார்கள். வாழ்க்கைச் சுவடுகள் தொடர்ச்சியாக இரண்டாம் பாகம் எழுதுவது பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறேன். விரைவில் எழுதத் தொடங்குவேன். நலமாக இருக்கிறேன், உங்கள் உடல்நிலை நன்கு தேற பிரார்த்திக்கிறேன், நீங்கள் இலக்கியப் புரட்சியாளர் என்ற நூலை வெளியிட இருப்பது மகிழ்ச்சியான விஷயம்,

வாழ்த்துக்கள்.

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன் **சென்னை**

28.09.2002

அன்பு நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம், உங்கள் வாழ்த்துக் கடிதம் பெற்று மகிழ்ந்தேன். நேற்று மாலை ஆதித்தனார் பிறந்தநாள் இலக்கியப் பரிசு வழங்கும் விழா வெகுசிறப்பாக நடந்தது. நான் நலமாக இருக்கிறேன். அண்ணியும் பிள்ளைகளும் நலம். நீங்களும்

குடும்பத்தினரும் நலமாக இருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். எங்கும் வெயில் கடுமையாகத்தான் இருக்கிறது. நீங்கள் உங்கள் ஆய்வுகளில் எப்போதும் போல் தீவிரமாக முனைந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்! வாழ்த்துக்கள்!

அன்பு.

வ.க.

வல்லிக்கண்ணன் **சென்னை**

08.11.2002

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம், நலமாக இருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். நான் நலம். நீங்கள் அன்புடன் அனுப்பிய இலக்கியப் புரட்சியாளர் வ.உ.சி. நூல் இரண்டு பிரதிகள் கிடைக்கப் பெற்றேன். நன்றி. வ.உ.சி.அவர்களின் பேராற்றலையும் பெரும் சிறப்புகளையும் தமிழ் மக்களுக்கு அறிவுறுத்தும் அரிய பணியில் நீங்கள் அயராது தொடர்ந்து உழைத்து வருவது போற்றுதலுக்கு உரியதாகும். நாட்டுப் பணியை தேசீய விடுதலைப் போராட்டத்தை, தன்னிகரல்லாத் தன்மையில் ஆற்றிய வ.உ.சி. அவர்கள் தமிழ்மொழிக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் உயரியமுறையில் பணி புரிந்திருக்கிறார்கள். தமிழகம் இதைக் கண்டு கொள்ளவில்லை. ஒரு சிறிது கண்டிருந்தாலும் மறந்து ஒதுக்கி விட்டது. இந்த நிலையை மாற்றுவதற்காக நீங்கள் வ.உ.சி. பற்றி நூல்கள் எழுதியும், வ.உ.சி நூல்களை நல்லமுறையில் அச்சிட்டும் உழைத்துக் கொண்டிருப்பதும் சீரிய இலக்கியப் பணியேயாகும்.

'இன்னிலை' எனும் பழந்தமிழ் நூல் பற்றிய வ.உ.சி. அவர்களின் ஆய்வுரை அதன் ஆசிரியர் குறித்த தெளிவுரை, நூலின் சிறப்பான உரை ஆகியவை அவர்களது புலமையையும் ஆய்வுத் திறமையையும் நன்கு வெளிப்படுத்துகின்றன.

'இன்னிலை' நூல் குறித்த பலப்பல அறிஞர்களது மாறுபட்ட கருத்துக்களை சேகரித்து உரியமுறையில் நன்கு

தொகுத்துத் தந்திருக்கிறீர்கள். இது உங்களுடைய உழைப்பையும், ஆராய்ச்சித் திறனையும், உணர்ந்ததை உணர்ந்தபடி அப்படியே கொடுக்க வேண்டும் எனும் ஆய்வு நேர்மையையும் எடுத்துக்காட்டுகின்றன. வாழ்க உங்கள் ஆய்வுப் பணிகள்.

அன்பு.

வ.க.

வல்லிக்கண்ணன் **சென்னை**

08.03.2003

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம்.

நலமாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன். நான் நலம்.

உங்கள் புதிய வெளியீடான 'வ.உ.சி-யின் உயில்' நூல் பிரதிகள் கிடைக்கப் பெற்றேன். மிக்க நன்றி,

வ.உ.சி.யின் எழுத்துக்களை தேடிக்கண்டு பிடித்து, நல்லமுறையில் நூல்களாக வெளியிடும் பணியில் நீங்கள் உங்கள் வாழ்க்கையை, உழைப்பை, காலம் முழுவதையும் அர்ப்பணித்துக் கொண்டிருப்பது போற்றுதலுக்கு உரியது.

நாட்டின் விடுதலைக்காக தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஈடுபடுத்தி, அரும்பெரும் பணிகள் ஆற்றிய தலைவர் வ.உ.சி. தமிழ்மொழிக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் அரிய முறையில் தொண்டாற்றியுள்ள அறிஞர் அவரது வாழ்க்கையில் பிற்பகுதியில் மிகவும் சிரமப்பட நேரிட்டதை அவரது வரலாறு உணர்த்துகிறது. தமது இறுதிக்கட்டத்தில் அவர் எழுதிய 'உயில்' அதை மேலும் நன்கு எடுத்துக் காட்டுகிறது. கடன் பளு, வீட்டை செப்பனிட முடியாத நிலைமை, பருவ வயது அடைந்துள்ள பெண்களுக்கு திருமணம் செய்துவைக்க முடியாத சங்கடம், இப்படி அநேக பிரச்சனைகளாலும், அவர் மனஉளைச்சல் பெற்றிருந்ததை அவருடைய 'உயில்' புலப்படுத்துகிறது.

தனக்கு மரணம் நெருங்கிவிட்டது என்பதை அவரே உணர்ந்திருந்ததையும், 'உயில்' சுட்டுகிறது. 'நான் இனிமேல் அதிக காலம் ஜீவித்திருப்பேனென்று திடமாக நினைக்கவில்லை' என்று 1936 அக்டோபர் 26-இல் அவர் குறிப்பிடுகிறார். அவ்வாறே 1936 நவம்பர் 18 இல் அவரை மரணம் தழுவியது. நீங்கள் எடுத்துக்காட்டியிருப்பது போல '23 முழு நாட்களுக்குள்' அவர் இறந்து போனார்.

வ.உ.சி.யின் பணிகளையும் பெருமைகளையும் தமிழ் மக்களுக்கு அறிவுறுத்தும் விதத்தில் அவரது எழுத்துக்களை நீங்கள் தொடர்ந்து பதிப்பித்து வருவது சிறப்பான பணியாகும். உங்கள் பணிகள் மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன் **சென்னை.**

17.03.2003

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம்,

நீங்கள் அன்புடன் அனுப்பிய 'சொல் புதிது' இதழும், 13-ஆம் தேதிக் கடிதமும் 14-இல் கிடைக்கப் பெற்றேன். நன்றி. நீங்கள் இதழியல்துறையில் பத்திரிகைப் பதிப்பாசிரியராக அடி எடுத்து வைத்திருப்பது மகிழ்ச்சியான விஷயம். இப் புதிய துறையில் நீங்கள் வெற்றி பெற்றுப் புகழடைய வேண்டும் என விரும்புகிறேன். வாழ்த்துகிறேன்.

புதிதாக ஒரு பத்திரிகையின் பதிப்பாசிரியராக, அல்லது வேறு ஒரு இதழின் பதிப்பாசிரியராக நீங்கள் முனைந்திருந்தால், நான் பெரிதும் மகிழ்ந்திருப்பேன். 'சொல் புதிது' சில வர்ணங்களைப் பெற்றுள்ள இதழ். எழுத்தாளர் ஜெயமோகனுக்காக ஆரம்பித்து, நடத்தப்பட்ட இதழ். முதலில் சூத்ரதாரியும், செந்தூரம் ஜெகதீஷும் பொறுப்பேற்று

பத்திரிகை வெளியீட்டை கவனித்தார்கள். பின்னர் என்ன காரணத்தினாலோ, ஜெயமோகனே மேற்பார்த்து தக்கலையிலிருந்து (அல்லது, குமரி மாவட்டத்திலிருந்து) வெளியிடுவதாகச் சொல்லப்பட்டது. இப்போது திவான் பதிப்பாசிரியர் என்றும், பல முஸ்லிம் நண்பர்கள் பெயர்கள் (துணை) உடன் வெளிவருவதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. இதன் விவகாரங்கள் எனக்குத் தெரியாது. பத்திரிகை அதன் நோக்கிலும், போக்கிலும் தரமானதுதான். ஜெயமோகன் கருத்துக்கள் மேலோங்கியிருந்தன. இதுவரை. இனி மாற்றங்கள் ஏற்படலாம். ஜெயமோகன் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். (தெரிந்தவர்களிடம் விசாரித்து அவர் பற்றி நன்கு அறிந்து கொள்க)

நீங்கள் 50 வயதை நெருங்குவதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இக் காலப் பரப்பில், வரலாற்று ஆய்வுத் துறையில் நீங்கள் அரிய சாதனைகள் புரிந்திருக்கிறீர்கள். வ.உ.சி. நூல்களையும், வேறு பல அரிய நூல்களையும் நல்லமுறையில் பதிப்பித்திருக்கிறீர்கள். இப்ப கூட முகமது பின் துக்ளக் பற்றிய உண்மைகளை வெளிப்படுத்தும் ஆய்வில் ஈடுபட்டிருக்கிறீர்கள். இவை போற்றுதலுக்கு உரியவை. நீங்கள் உங்கள் இலட்சியப் பணியில் மேலும் வெற்றிகள் பெற்றுப் பிரகாசிக்க வாழ்த்துகிறேன்.

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன் **சென்னை.**

19.03.2003

அன்புமிக்க நண்பர் அவர்களுக்கு வணக்கம், உங்கள் 15-ஆம் தேதிக் கடிதம் இன்று கிடைத்தது. உங்களது முந்திய கடிதமும் ‘சொல்புதிது’ இதழும் கிடைத்ததும் 17-ஆம் தேதி உங்களுக்கு நான் கடிதம் (இன்லன்ட்) அனுப்பினேன். அது இன்று தான் உங்களுக்கு கிடைக்கும். என் வாழ்த்துக்களை

தெரிவித்ததுடன் 'சொல் புதிது' பற்றிய சில தகவல்களையும் எழுதியிருந்தேன். எழுத்தாளர் ஜெயமோகன் பற்றிய விசாரித்துத் தெரிந்து கொள்க என்றும் குறிப்பிட்டிருந்தேன். நீங்களே தி.க.சியின் அறிவுரைப்படி உங்கள் புதிய பொறுப்பிலிருந்து உங்களை விடுவித்துக் கொண்டது நல்ல காரியம். பத்திரிகைப் பொறுப்பு வீண் (நன்கு பயன்தராாத) வேலைதான். நீங்கள் முழுஈடுபாட்டுடன் கவனித்து வருகிற ஆய்வுப் பணிகளையும் அவை சம்பந்தமான பதிப்புப் பணிகளையும் செம்மையாகச் செய்து வந்தாலே போதும். நிலையான பெயர் வந்து சேரும். வாழ்த்துக்கள்.

நலமாக இருக்கிறேன். நலமே நாடுகிறேன்.

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன் **சென்னை**

03.11.2003

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம், நீங்கள் அன்புடன் அனுப்பிய 'மருதநாயகம்' நூல் உரியநாளில் கிடைத்தது. கடிதமும் கண்டேன். பதில் எழுதுவதில் தான் தாமதம். மிக அதிகமான வேலைகள். பரோபகாரப் பணிகள் தான். புதிய நூல்களுக்கு 'அணிந்துரை' எழுதிக் கொடுப்பது, பலவிதமான புத்தகங்களையும் படித்து கருத்து தெரிவிப்பது, பத்திரிகைகளை படித்து அபிப்பிராயம் எழுதுவது, இவற்றுடன் கட்டுரை கேட்பவர்களுக்கு எழுதுவது என்று ஏகப்பட்ட வேலைகள். மெதுமெதுவாகத் தான் செய்ய முடிகிறது.

அதனால் தான் நீங்கள் தந்த 'தியாக நெருப்பில் வைகோ' நூலை படிப்பதில் தாமதம் தவிர்க்க இயலாதது ஆகிவிட்டது. படித்தேன் அதுபற்றி விரிவான கட்டுரை எழுதி, நேற்றுதான் அநா. பாலகிருஷ்ணனிடம் கொடுத்தேன். அதை இன்று அவர் 'சங்கொலி' திருநாவுக்கரசிடம் சேர்த்துவிடுவார்.

'தியாக நெருப்பில் வைகோ' நூலை அருமையான ஆவணமாக உருவாக்கியிருக்கிறீர்கள். வேலூர் பற்றியும், வேலூர் சிறை, அதில் அடைபட்டிருந்தவர்கள், அங்கிருந்த வெளியேறிய பின் அவர்கள் மேனிலை அடைந்தது முதலிய வரலாற்று உண்மைகளை நன்கு தொகுத்திருக்கிறீர்கள். வைகோ அவர்களின் தியாகம், கொள்கை, சிறைவாழ்க்கை, அவரது உழைப்பு, உணர்வுகள் முதலியவற்றை உரிய முறையில் அழுத்தமாக எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். காழ்ப்பு உணர்வும் பொறாமையும் கொண்ட இலக்குமணனின் அவதூறு புத்தகம் பற்றி அந்த நபரின் புளுகுகள் பொய் குற்றசாட்டுகள் முதலியவற்றுக்கு நல்லமுறையில், ஆணித்தரமாக பதில் அளித்திருக்கிறீர்கள். திசைமாறுதல், பற்றிய கருத்து, வரலாற்று நிகழ்வுகள் ஆகியவற்றை நன்கு எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். **வைகோவின் கொள்கைப் பற்றுதல், சோர்வுறாது போராடுதல், எதிர்கால நம்பிக்கை பற்றி இறுதிப்படுத்தி அழுத்தமாக** அறிவிக்கிறது. ஒரு சிறப்பான நூலை வசீகரவனப்புடன் தயாரித்து அளித்திருக்கிறீர்கள். பராட்டுக்கள், வாழ்த்துக்கள் உங்கள் வரலாற்று அறிவும், ஆய்வுத்திறமும் இந்நூலில் நன்கு புலனாகின்றன.

அன்பு.

வ.க.

வல்லிக்கண்ணன் **சென்னை**

21.05.2004

அருமை நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம்.

நீங்கள் அன்புடன் அனுப்பிய 'வியத்தகு சாதனையாளர் வைகோ' என்ற நூல் உரிய நாளில் கிடைக்கப்பெற்றேன். நன்றி,

நூலை அழகாக, வசீகரத்தோற்றத்துடன், தயாரித்திருக்கிறீர்கள். அரசியல் தலைவர் வைகோ அவர்கள் செய்த சாதனைகளை முதலிலேயே உங்கள் 'எண்ண

அலைகள்' பகுதியில் நன்கு சுட்டியிருக்கிறீர்கள். பின்னர் நூல்பகுதியில் இரயில்வேத் துறை சம்பந்தப்பட்ட பல்வகை பணியாளர்களுக்கு வைகோ செய்துள்ள உதவிகள் விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றன. வைகோ அவர்களின் சாதனைகள் போற்றிப் பாராட்டப்பட வேண்டியவை. இறுதியில், மக்கள் நலனுக்காகவும், நாட்டின் முன்னேற்றத்துக்க தேவைப்பட்ட போதெல்லாம் உரிமைக் குரல் கொடுத்து, துணிந்து போராட்டத்தில் ஈடுபட்டு வைகோ இருபத்து நான்குமுறை சிறை சென்ற விவரம் இடம்பெற்றுள்ளது.

தன்னலமற்று, நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் அயராது பாடுபட்டுப் போராடி வருகிற தலைவர் வைகோ வாழ்க. அவரது சாதனைகளையும், பணிகளையும் நல்லமுறையில் நாட்டினருக்கு எடுத்துக்கூறுவதில் ஆர்வமாக ஈடுபட்டு உழைத்துவரும் உங்கள் பணிகளும் பாராட்டப்ப வேண்டியவையே.

27.5.2004 அன்று நீங்கள் எழுதிய செந்தமிழ் வளர்த்த சிங்கப்பூர் அநா.மொய்தீன், வியத்தகு சாதனையாளர் வைகோ. மாநபி(ஸல்) காட்டிய மனித உரிமைகள் ஆகிய நூல்கள் வெளியீட்டு விழா பெறுவதை அறிந்து மகிழ்கிறேன். விழா வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

அன்பு

வல்லிக்கண்ணன்

வல்லிக்கண்ணன் **சென்னை**

3.6.2004

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம் நீங்கள் அன்புடன் அனுப்பிய 'மாநபி (ஸல்) காட்டிய மனித உரிமைகள்', 'செந்தமிழ் வளர்த்த சிங்கப்பூர் அ.நா. மெய்தீன்' ஆகிய இரண்டு நூல்களும் உரியநாளில் கிடைக்கப் பெற்றேன். நன்றி, சென்ற வாரம் நூல்கள் வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது என்று நண்பர்

தி.க.சிவசங்கரன் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். சந்தோஷம். நூல்கள் வசீகர வனப்புடன் அமைந்துள்ளன. 'மாநபி காட்டிய மனித உரிமைகள்' நூலை படித்தேன். உரிமைகள் குறித்த வரலாற்றுப் பதிவுகளையும் மாநபிகள் காட்டிய வழிமுறைகளையும் நன்கு எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். ஆழ்ந்த ஆய்வுப் புலமை நூல் முழுவதும் புலனாகிறது. உங்கள் நூல்கள் உங்களது ஆய்வுத் திறமையையும் உழைப்பாற்றலையும் வெளிப்படுத்துகின்றன. பாராட்டுக்கள் வாழ்த்துக்கள் நலமாக இருக்கிறேன்! நலமே நாடுகிறேன்.

அன்பு

வல்லிக்கண்ணன்.

வல்லிக்கண்ணன் **சென்னை**

17.09.2004

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம் நலமாக இருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். நான் நலம். நீங்கள் அன்புடன் அனுப்பிய 'விடுதலைப் போரில் வீரமிகு முஸ்லிம்கள்', 'வைகோ, வெற்றிப்பாதை... வீரச் சங்கொலி' இரண்டு நூல்களும் கிடைக்கப்பெற்றேன் நன்றி, தொடர்ந்து நூல்களை அனுப்பி உதவுகிறீர்கள். மகிழ்ச்சி. வேலை மிகுதியால் உடனுக்குடன் படித்து, கருத்து தெரிவிக்க இயலவில்லை. இப்புத்தகங்களை படித்தபின் விரிவாக எழுதுவேன். எழுதுவதற்காகவே வாழ்ந்து கொண்டிருக்கும் ஊழியன்' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். நீங்கள் எழுத வேண்டுமே என்று கற்பனையாகவோ, வெறுமனையோ கதை அளக்க ஆசைப்படாமல், ஆய்வு செய்து, வரலாற்று பூர்வமான விஷயங்களையே பதிவு செய்கிறீர்கள். இது வெகுவாகப் பாராட்டப்பட வேண்டிய, தனிச்சிறப்புடைய, பணி ஆகும். அயராது ஆய்வுப் பணிகளிலும், எழுத்துப் பணிகளிலும்

ஈடுபட்டிருக்கும் உங்கள் ஆற்றலும் உழைப்பும் போற்றுதலுக்கு உரியவை. வாழ்க. வளர்க.

அன்பு

வல்லிக்கண்ணன்

வல்லிக்கண்ணன்

சென்னை

23.03.2005

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம் உங்கள் 12-3-2005 கடிதமும் 'பசுவதை -ஒரு வரலாற்றுப் பார்வை' என்ற நூலும் 13-ஆம் தேதி வந்து சேர்ந்தன. மிக்க நன்றி மிகு வேலைகள் காரணமாக உடனடியாகக் கடிதம் எழுத இயலாது போய்விட்டது. உடல் நலக்குறைவால் முப்பது நாள்கள் கேரளாவில் சிகிச்சை பெற்றுத் திரும்பியதாக எழுதியிருந்தீர்கள். இப்போது நல்ல குணம் கண்டு சுகமாக இருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். நான் நலம். பன்னெடுங் காலத்திலிருந்தே, ஆரியர்களும் பிற இனத்தினரும் பசு, ஆடு, மாடு முதலிய மிருகங்களைக் கொன்று அவற்றின் இறைச்சியை உண்டு களித்தனர். நாய்க்கறியைக் கூட சாப்பிட்டிருக்கிறார்கள். யாகங்களிலும், கடவுளர் முன்னும் மிருகங்களை பலியிட்டு அவற்றின் மாமிசத்தைப் புசிக்கும் வழக்கம் நிலைபெற்றிருந்தது. இவ் வரலாற்று உண்மைகளை மிகப் பரந்த ஆதாரங்களுடன், ஆழ்ந்த ஆராய்ச்சி முறையில் நன்கு பதிவு செய்திருக்கிறீர்கள். உங்களது ஆழ்ந்து அகன்ற படிப்பு அறிவையும், ஆராய்ச்சிப் புலமையையும், சோர்விலா உழைப்பையும் இந்நூல் வெளிப்படுத்துகிறது. பாராட்டுகிறேன், வாழ்த்துக்கள்

அன்பு

வல்லிக்கண்ணன்.

வல்லிக்கண்ணன் சென்னை

20.09.2005

அன்பு மிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம், நலமாக இருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். நான் நலம். அவ்வப்போது உங்களுக்குக் கடிதம் எழுதவேண்டும் என்ற நினைப்பு எழும். ஆனாலும், அந்த எண்ணம் செயல்படாமலே காலம் ஓடிவிடுகிறது. நீங்கள் அன்புடன் அனுப்பிய 'விடியல் வெள்ளி'யின் ஆகஸ்ட் செப்டம்பர் இதழ்கள் நேற்று கிடைக்கப்பெற்றேன். 'சுஜாதாவிற்குச் சவால்' கட்டுரையின் இருபகுதிகளையும், படித்தேன். சுஜாதா சகலகலா வல்லவர் என்று காட்டிக்கொள்ளும் ஆசையோடு பலவிதமான எழுத்து முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறார். திருக்குறளுக்கு அவர் எழுதி வெளியிட்டுள்ள உரையில் பல பிழைகள் உள்ளன என்று சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர். பழம் தமிழ் இலக்கியங்கள் பற்றி அவர் எழுதியுள்ளனவற்றிலும், குறைகள் உள்ளன என்று எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. அடிக்கடி அவர் செய்கிற தவறுகளை தகுதிவாய்ந்தவர்கள் அவரது கவனத்துக்கு கொண்டு வரத்தான் செய்கிறார்கள். அவை எல்லாம் தனக்கு மிகு கவனிப்பு பெற்றுத் தருகிற சாதனைகள் என்றே அவர் பெருமைப்பட்டுக் கொள்கிறார். சுஜாதாவின் குறைபாடுகளை அவருடைய எழுத்துக்களிலிருந்தே தேர்ந்து எடுத்து நீங்கள் தொகுத்துத் தந்திருக்கிறீர்கள். இதர அறிஞர்களின் கூற்றுக்களையும் கவனத்துக்குக் கொண்டு வந்து, சுஜாதாவின் சரித்திரச் சரடுகள் பற்றி விரிவாகவும் தெளிவாகவும் கருத்து உரைத்திருக்கிறீர்கள். முஸ்லிம்கள் படையெடுப்பு வைஷ்ணவர்கள் கொல்லப்பட்டது, கோபுரத்திலிருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டது பற்றிய செய்திகள் குறித்த வரலாற்று உண்மைகளை சான்றாதாரங்களுடன் விவரித்திருக்கிறீர்கள். **உங்களது ஆழ்ந்த வரலாற்று ஆய்வும், உண்மைகளைப் புலப்படுத்த வேண்டும் என்ற ஆர்வமும், அதற்காக நீங்கள்**

மேற்கொண்ட கடுமையான உழைப்பும், இந் நீண்ட கட்டுரையில் நன்கு புலனாகிறது. உங்கள் உண்மை நாட்டத்துக்கும், தெரிந்ததைத் துணிந்து வெளியிடும் ஆற்றலுக்கும் பாராட்டுக்கள்.

அன்பு

வ.க.

வல்லிக்கண்ணன்

சென்னை

14.12.2005

அன்புமிக்க நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம்.

நீங்கள் அனுப்பிய 'திராவிட இயக்கம் - வரலாற்றுக் குறிப்புகள்' 2 பிரதிகள் வரப்பெற்றேன். நன்றி.

இது உங்களது 59 ஆவது நூல் என்று அறிந்து மகிழ்கிறேன். திராவிட இயக்கம் தோன்றி வளர்ந்த விவரத்தை இந்த நூல் மூலம் நன்கு அறியமுடிகிறது. ஆரம்ப நிலையில் செயல்பட்ட சங்கங்கள், திராவிடம் என்ற பெயர் வந்த விவரம், பல்வேறு மாநாடுகள், திராவிட இயக்கத்தின் அரசியல் வெற்றி, பெரியார், அண்ணாதுரை, வைகோ பற்றி எல்லாம் விரிவான செய்திகள் தொகுத்துத் தரப்பட்டிருக்கின்றன. துவக்க காலம் பற்றிய அரிய வரலாற்றுக் குறிப்புகளைத் தேடிக் கண்டு முறையாக தொகுத்துத்தந்திருப்பது, உங்களுடைய ஆய்வுத் திறமையையும், உழைப்பையும் புலப்படுத்துகின்றன. புத்தகம் வசீகரமான தோற்றத்துடன் நன்றாக அமைந்து காணப்படுகிறது. எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன்.

நான் நலம், அண்ணியும், பிள்ளைகளும் சுகம். நீங்களும் குடும்பத்தினரும் நலமாக இருப்பீர்கள் என்று எண்ணுகிறேன்.

அன்பு

வல்லிக்கண்ணன்

வல்லிக்கண்ணன் **சென்னை**

22.01.2006

அன்பு நண்பர், திவான், வணக்கம். நலமாக இருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். நான் நலம் 'புது வருடம்' பிறந்தும் 22 நாள்கள் ஆகின்றன. காலம் வேகமாகப் போவது போல் தான் தோன்றுகிறது. புது வருடம் உங்களுக்கு வெற்றிகள் கொண்டு சேர்க்கட்டும். 'சங்கொலி' பொங்கல் இதழில் 'வ.உ.சி.யின் படைப்புகள்' பற்றி நீங்கள் எழுதியுள்ள கட்டுரையைப் படித்து மகிழ்ந்தேன். வ.உ.சியின் சாதனைகள் பற்றியும் அவரது நூல்கள் குறித்தும் விரிவாக எழுதியிருக்கிறீர்கள். பாராட்டுக்கள். நீங்கள் தொடர்ந்து ஆய்வுப் பணியில் ஈடுபட்டு ஆர்வத்தோடு உழைத்து வருவது போற்றுதலுக்கு உரியது. வாழ்த்துக்கள்.

அன்பு

வல்லிக்கண்ணன்.

வல்லிக்கண்ணன் **சென்னை**

08.02.2006

அன்பு நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம், நீங்கள் அனுப்பிய 'சுஜாதாவிற்குச் சவால்' தொடரின் அத்தியாயங்கள் வரப்பெற்றேன். கடிதமும் கண்டேன். மகிழ்ச்சி, நன்றி, படித்துப் பார்த்து என் கருத்தை எழுதி அனுப்புவேன். அலுவல்கள் அதிகம். அதனால் இதை படிப்பதற்கு சிறிது காலஅவகாசம் தேவை. எப்படியும் கூடிய விரைவில் படித்து விடுவேன். நலமாக இருக்கிறேன். நலமே நாடுகிறேன்.

அன்பு

வல்லிக்கண்ணன்

வல்லிக்கண்ணன் சென்னை

27.08.2006*

அன்பு மிக்க நண்பர் செ. திவான் அவர்களுக்கு,

வணக்கம், நீங்கள் அன்புடன் அனுப்பிய 'வேலூர்ப் புரட்சியில் வீரமிகு முஸ்லிம்கள்' என்ற நூல் உரிய நாளில் கிடைக்கப் பெற்றேன். நன்றி.

நூல் நன்றாக, உயர்ந்த முறையில், சிறப்பாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. உள்ளடக்கம், உங்கள் ஆய்வுத் திறமையையும், கடுமையான உழைப்பையும் எடுத்துக் காட்டுகிறது. வேலூர்ப் புரட்சியின் 200 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி, இந்த ஆய்வு நூலை வெளியிட்டிருப்பது விசேஷமானது. பொருத்தமானது.

படித்து மகிழ்ந்தேன். வியாபாரம் செய்யும் நோக்கத்துடன் இந்தியாவுக்கு வந்த வெள்ளையர்கள் இங்கு செழித்துக் கிடக்கும் வளங்களைக் கண்டு, அவற்றை தமதாக்கிக் கொள்ளப் பேராசைப்பட்டதும், இந்த நாட்டில் இருந்த மன்னர்களின் போட்டி, பொறாமை, ஒற்றுமையின்மை, தங்களுக்குள் சண்டை போட்டு மாற்றானைக் கெடுக்க நினைத்த சிறுமதி முதலிய குணக்கேடுகளைப் பயன்படுத்திக் கொண்டு, சூழ்ச்சி, வஞ்சக வேலைகள், பிரித்தாளும் கொள்கை முதலியவற்றால் நாட்டையே அபகரித்து ஆட்சியாளராக வளர்ந்ததும் வரலாறு. அந்த நிலையை ஆரம்பத்திலேயே எதிர்த்து, ஆங்கிலேயருடன் கடுமையாகச் சண்டையிட்ட தீரர்களில் திப்பு சுல்தான் முக்கியமானவர். அவருடைய வீரத்தையும், ஆங்கிலேயரின் சதிகள் சூழ்ச்சிகளையும், திப்பு வஞ்சகமாகக் கொல்லப்பட்டதையும், அதற்குப் பிறகு அவருடைய மகன்களின் நிலையையும், வேலூரில் வெடித்த புரட்சி பற்றியும் ஆராய்ச்சி செய்து, அரிய ஆதாரங்களுடன் இந்நூலை நீங்கள்

---

* இந்தக் கடிதம் அடியேனுக்கு எழுதியது 27.08.2006. வல்லிக்கண்ணன் மறைவெய்தியது 09.11.2006. பின்னர் கடிதங்கள் தொடர முடியுமா?

ஆக்கியிருப்பதை வெகுவாக பாராட்ட வேண்டும். வேலூர் கோட்டையினுள் வெற்றி பெற்ற சிப்பாய்கள் பேராசை கொண்டு வெள்ளையரின் சொத்துக்கள் பணம் ஆகியவற்றை கொள்ளை அடிப்பதில் ஈடுபடாமல் பிடித்த கோட்டையைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தி எதிர்ப்பை வலுவாக்கி மேலும் போராடியிருந்தால் வரலாறு வேறுவிதமாக அமைந்திருக்கக்கூடும். இதை எல்லாம் இந்த நூல் நன்கு விவரிக்கிறது. பாராட்டுக்கள், வாழ்த்துக்கள், நலமாக இருக்கிறேன், நலமே நாடுகிறேன்.

அன்பு

வல்லிக்கண்ணன்.

வல்லிக்கண்ணன் கடிதங்கள்



செ.திவான்